விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-7547)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 03 புதன்கிழமை (15.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

# சிங்கம் என சிலிர்த்தவருக்கு சிறை என பேரிடி



# சசிகலா குற்றவாளி

## சொத்துக்குவிப்பு வழக்கில் நேற்று உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

(சென்னை)

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 3 பேரும் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜெயலலிதா மரணமடைந்துவிட்டதால் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. தான் சிங்கம் எனவும் தன்னை எந்தக் கொம்பனாலும் அசைக்க முடியாது எனவும் சசிகலா இறுமாப்புடன் இருந்த நிலையில், மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை உச்ச நீதிமன்ற நீதிபதிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது. (12, 13-ம் பக்.)

## கர்ப்பிணி கொலை; மரண விசாரணையில் சாட்சியங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் ஏழு மாத கர்ப்பிணி பெண்ணொருவர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணையின் மரண விசாரணையானது ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு காணிகளை விடுவிக்க ஜனாதிபதி பணிப்பு!

### அமைச்சர் சுவாமிநாதன் தகவல்

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு கேப்பாப்பிலவு, பிலவுக் குடியிருப்பு மக்களின் காணிகளை விமானப்படையினரிடமிருந்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகா

23ஆம் பக்கம் பார்க்க....

## ஏனையோரின் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள்!

### பிரதமர் ரணில் அறிவுரை

(கொழும்பு)

ஏனையவர்கள் விடும் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பட்டதாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நேற்று கலாநிதிப் பட்டம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

செலோங் நகரிலுள்ள டீக்கென் பல்கலைகழத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலேயே சட்டத்துறையில் ரணில் விக்கிரமசிங்கவி

23ஆம் பக்கம் பார்க்க....

## அசிட் வீச்சில் மாணவி கொலை; சாட்சிகளிடம் மன்று விசாரணை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் மாணவி ஒருவர் மீது அசிட் வீசி அவரை கொலை செய்த வழக்கில் மாணவியின் தாயின் சாட்சியத்தை தொடர்ந்து மேலதிக சாட்சிகளிடம் விசாரணை மேற்கொள்ளவதற்காக குறித்த வழக்கை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.

23ஆம் பக்கம் பார்க்க....

## மழைக்கு மத்தியிலும் போராட்டம்



23ஆம் பக்கம் பார்க்க....

## மானிய விலையில் மக்களுக்கு அரிசி

(கொழும்பு)

மக்களுக்கு மானிய விலையில் அரிசியை வழங்குவதற்கு உரிய திட்டமொன்றை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி இறக்குமதியாளர்களுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில நடைபெற்ற பேச்சுவார்த்தை

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்!



### பாலுக்குப் பூனை பாதுகாப்பு போல என விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் சில தீர்மானங்கள் நன்மையுள்ளவையாக இருப்பினும் அவற்றின் நடைமுறை பூனையைக் கொண்டு பாலைப் பாதுகாக்க வைப்பது போன்றே உள்ளது என வடமாகாண முதல

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரமிட் வியாபாரத்தில் இணைபவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுவர்

### யாழ்.பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிரமிட் வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் இணைந்து கொள்பவர்கள் வருகின்ற நாட்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர் என யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரமிட் வியாபாரத்தின் மூலம் நடைபெறும் மோசடிகளைத் தடுக்கும் நோக்கோடு, இலங்கை மத்திய

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 05 . 1932



மறைவு
14 . 02 . 2017

## கதிரவேலு இராசமணி

புத்தூரை பிறப்பிடமாகவும் இல, 42 D. 10 உருத்திரபுரத்தை வதிவிடமாகக் கொண்ட **கதிரவேலு இராசமணி** 14.02.2017 அன்று காலமானார், அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாச்சிப்பிள்ளையின் அன்பு மகளும் அமரர் புத்தூர் இரத்தினத்தின் அன்பு மனைவியும் தெய்வேந்திரம், தவஞானம் ஆகியோரின் தாயாரும் குணதேவி, அமரர் தளையசிங்கம் ஆகியோரின் மாமியாரும், சங்கீதா (சுவிஸ்), சுஜீபன் (சுவிஸ்), சுஜிதா (சுவிஸ்), திலீபா (கனடா), கபிலன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15.02.2017 இன்று மாணிக்கப்பிள்ளையார் கோவில் உருத்திரபுரம் அருகாமையில் உள்ள தற்காலிக இல்லத்தில் இடம்பெற்று மாலை 03 மணியளவில் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C - 7558)

# காலநிலையில் மாற்றம்!

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நிலவும் வறட்சி மற்றும் குளிரான காலநிலை இனி வரும் நாட்களில் குறைவடையும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

காலநிலை அவதான நிலையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று இரவு நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பொழியக்கூடும் என காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

அதேபோல் இன்றும் நாளையும் வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் வட மேற்கு மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பரவலான மழை பொழியக் கூடும் என அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## சையிட்டத்துக்கு எதிராகப் பேரணி

அரசாங்கம் எவ்வகையான தீர்மானங்களை நடைமுறைப்படுத்தினாலும் சையிட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டம் பாரியளவில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அந்த ஒன்றியத்தின் இணைப்பாளர் லகிரு வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

இதன்படி இன்றைய தினம் நாட்டின் பல பாகங்களிலும் ஆரம்பமாகும் இந்த எதிர்ப்புப்பேரணி எதிர் வரும் 17ஆம் திகதி கொழும்பை வந்தடையும்எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## தவறிவிட்டது

டச் வீதி, உடுவிலில் வசிக்கும் செபஸ்தியாம்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ் மனோகரன் (NIC இல.490852816V) ஆகிய எனது மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் 06.02.2017 அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள். (7953)

**075 529 7295, 021 224 2669**

## மகாஜனன் கணித, விஞ்ஞான புதிர்ப்போட்டி 2017 (தரம் - 8)

மகாஜன கல்லூரி கனடா ப.மா.சங்க ஆதரவுடன் சட்டத்தரணி மகாஜனன் திரு.**இ. செல்வஸ்கந்தன்** அவர்களின் அனுசரணையுடன் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் தரம் - 8 மாணவர்களுக்கான மேற்படி போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாணவர்கள் தமது சுயவிபரத்துடனான விண்ணப்பத்தினை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கவும்.

| ஒவ்வொரு போட்டிக்குமான பரிசில்கள் | | விண்ணப்ப முடிவுத் திகதி |
|---|---|---|
| 1ம் இடம் | - 20000 | **25.02.2017** |
| 2ம் இடம் | - 15000 | பரீட்சைத் திகதி |
| 3ம் இடம் | - 10000 | **05.03.2017** |
| 4, 5, 6ம் இடம் | - 7500 | நேரம் |
| 7, 8, 9,10ம் இடம் | - 5000 | **காலை 10 மணி** |

**அதிபர்**
மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(C-7553)

# 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
20 - 08 - 1948



ஆண்டவன் மடியில்
15 - 01 - 2017

அமரர்
## கணபதிப்பிள்ளை அரிச்சந்திரன்
இல.07D/01 மல்லாவி, யோகபுரம்

மல்லாவி மேட்டினில்
மன்னவனாய் வலம் வந்து
கண் விழிக்கும் வேளையில்
கண்ணயர்ந்து போனவரே...
எண்ணமெல்லாம் உம்
நினைவுகள் சுமந்து நிற்க
என்னவெல்லாம் ஆகியதோ??
காலம் எல்லாம் உம்
கனவோடு வாழும் — எம்
கண்முன் வருவீரோ???...

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

(C-7535)



# புதிய மாணவர்கள் அனுமதியை ஆறு மாதங்களுக்கு கைவிடவும்

## சைற்றம் மருத்துவக் கல்லூரிக்கு அறிவுறுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும் வரையில் புதிய மாணவர்கள் அனுமதியை ஆறு மாதங்களுக்கு கைவிட வேண்டும் என சைற்றம் மருத்துவக் கல்லூரி நிறுவனத்திற்கு அறிவிக்கவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை விசேட கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களின் எட்டு மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தப் பரிந்துரைகளை சைற்றம் நிறுவனத்துக்கு வழங்குவதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டீ.சீ. திஸாநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான டி சில்வா, அதன் உபதலைவர் பேராசிரியர் பி.எஸ். எம். குணரத்ன மற்றும் அமைச்சர்கள் பலர் இதில் பங்கேற்றுள்ளனர்.(இ-3-7)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆஸியில் கௌரவ கலாநிதிப்பட்டம்



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலிய டெக்கின் பல்கலைக்கழகம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது.

இந்த வைபவம், டெக்கின் பல்கலைக்கழகத்தில நேற்று நடைபெற்றது. (இ)

## கண்வில்லைகளுக்கு இனி நிர்ணய விலை

அடுத்த வாரம் முதல் கண் வில்லைகளுக்கான விலை நிர்ணயம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிப்பதற்குத் தேவ்வயான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இதற்கமைய சகலவிதமான கண்வில்லைகளின் விலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சுமார் 30,000 ரூபாவிற்கு விற்கப்படுகின்ற கண் வில்லைகளை 8000 ரூபாவிற்கு பெற்றுக்கொள்ள முடியும் என்றும், இதனால் விநியோகஸ்தர்களுக்கு எவ்வித நட்டமும் ஏற்படமாட்டாது எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேபோன்று மேலும் பல மருந்து வகைகளின் விலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3-7)

## இரத்தினபுரி மாவட்டத்தில் 11 பேருக்கு மூளைக்காய்ச்சல்

இரத்தினபுரி மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதாக வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரை 11 பேர் இந்நோய்க்கு உட்பட்டுள்ளதாகவும் பலாங்கொடை, காவத்தை, குருவிட்ட, எலபாத்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இந்நோய்க்கு உள்ளாகியுள்ளதாகவும் இவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இரத்தினபுரி மாவட்ட வைத்திய அதிகாரி சம்பத் ரணவீர தெரிவித்தார். இந்நோய்க்கு உட்பட்டதாக சந்தேகிக்கப்படும் நோயாளர்களின் இரத்தம் இரத்தப் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு நோய் உறுதி செய்யப்படும் பட்சத்தில் இவர்களுக்கு விசேட வைத்திய பரிசோதனை நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். இந் நோய் பன்றிகளாலேயே பரப்பப்படுவதனால் பன்றிப்பண்ணைகளுக்கு அண்மித்து வசிப்போர் அவதானமாக இருக்கவேண்டுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு தசாப்த காலத்துக்கு முன் இப்பகுதியில் பரவிய இந்நோயால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3-7)

## உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனுத்தாக்கல்-அ.தி.மு.க.

(டில்லி)

பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் சசிகலாவுக்கு 4 ஆண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதித்து முன்னர் அளித்த தீர்ப்பை தற்போது உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனுத்தாக்கல் செய்வோம் என அ.தி. மு.க.எம்.பி.தம்பிதுரை பேட்டியளித்துள்ளார்.



சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா உள்ளிட்ட மூவரும் குற்றவாளி என்று உச்ச நீதிமன்றம் நேற்று பரபரப்பு தீர்ப்பு அளித்ததுடன், அவர்களுக்கு விதிக்கப்பட்ட 4 ஆண்டு தண்டனையையும் உறுதி செய்தது.

நேற்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து சீராய்வுமனுத்தாக்கல் செய்வோம என டில்லியில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அ.தி.மு.க.எம்.பி. தம்பிதுரை தெரிவித்தார். (இ-12)

## பல்கலை. கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகங்களினும் பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று புதன்கிழமை முதல் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொள்ளவிருந்த தொடர்ச்சியான வேலை நிறுத்தம், தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் வை.முபாறக் நேற்று தெரிவித்தார்.

கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடு, மாதாந்தக் கொடுப்பனவு, ஓய்வூதியம், விசேட கொடுப்பனவு, இடை நிறுத்தப்பட்ட மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு உள்ளிட்ட 06 கோரிக்கைகளை முன்வைத்து, அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்திருந்தனர்.

உயர் கல்வி அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கமைய தொடர்ச்சியான வேலை நிறுத்தம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகவும் முபாறக் தெரிவித்தார். (இ-3-7)

## புதிய இலக்குகளுக்கு மக்களால் எதிர்ப்பு

### அமைச்சர் வஜிர தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய இலக்குகள் முன்வைக்கப்படும் அனைத்து தருணங்களிலும் அதற்கு பொதுமக்களிடம், எதிர்ப்பு வெளியிடப்பட்டதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமான விடயம் என அவர் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-3-7)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்**
**பல்கலைக்கழக அனுமதி - 2016/2017**
**உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)**
**நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்**

மேற்படி நான்கு வருடபட்டப் படிப்புக்கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 28.02.2017ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

**அனுமதிக்கான தகைமைகள்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2016 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடகசங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச்சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும். (இலங்கை ப.மா.ஆணைக்குழு மாணவர் கைநூல் பக்கம் - 36 பிரிவு - 09)

**தகுதிகாண் பரீட்சைஆற்றுகை / உளச்சார்பு பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை / உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

சங்கீதம், நடனம் - ஆற்றுகை பரீட்சை

சித்திரமும் வடிவமைப்பும் - ஆற்றுகை மற்றும் உளச்சார்பு பரீட்சைகள்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழேகொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 300 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் **அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை / நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 28.02.2017 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 15.02.2017

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்**
**பல்கலைக்கழக அனுமதி – 2016/2017**
**நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்**
தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் - (Aptitude Test)

விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :- ______
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர் :- ______

தேசிய அடையாள அட்டையிலக்கம் :- ______

நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :- ______

தொலைபேசி இலக்கம்:- ______ மின்னஞ்சல் முகவரி:- ______

2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2016:-
சுட்டிலக்கம்: ______ Z புள்ளி: ______ பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி: ______

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர் / பாதுகாவலர் பெயர்: ______

முகவரி : (ஆங்கிலத்தில்):- ______

4. விண்ணப்பிக்கும் பாட நெறி: இசை ☐ நடனம் ☐ சித்திரமும் வடிவமைப்பும் ☐
(தெரிவிற்கு ✓ இடுக)

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ☐
2. உறுதிப்படுத்திய 2016 க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் ☐
   (Z புள்ளி / மாவட்டம் உள்ளடங்கலாக)
3. பெயர் மாற்றம செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ☐

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள்யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

................ ...........................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**என்முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.**

**திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்.**

(C-7548)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**பல்கலைக்கழக அனுமதி 2016 / 2017**
**உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)**
**மொழிபெயர்ப்புக் கற்கைநெறி**
**(தமிழ் மற்றும் ஆங்கிலம்)**

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 28.02.2017 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016 / 2017 கைநூல் பக்கம் 86, பகுதி 2.2.8.28 ற்கு அமைய தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**உளச்சார்புப் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கிலமொழித் திறமை அடிப்படையிலான உளச் சார்புப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை A-4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 300 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை, கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் பாடசாலை அதிபர் **அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2016 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும்.** பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 28.02.2017 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகையைமைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர் 15.02.2017
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

---

# University of Jaffna, Srilanka
Faculty of Arts
University Admission - 2016 / 2017
**Tamil and English**
**Bachelor of Arts (Special) in Translation Studies**
Application for Aptitude Test

1. Name with initials Tamil ______
   English ______
2. The Name denoted by initial ______
3. National Identy Card No ______
4. Permanent address ______
   (In English)
5. District ______
6. Telephone No ______ email address ______
7. District from which G.C.E (A/L) Examination 2016 was taken ______
8. Results of G.C.E (A/L) Examination 2016
   Index No ______ Z score ______ General Test marks ______

| No | Subject | Grade | Medium |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9. Name of parents / Guardian ______
   Address ______
   (In English)
10. Documents to be submitted
    1. Receipt of paid amount ☐
    2. Certified photo copy of the G.C.E(A/L) sheet (including Z score and District) ☐
    3. Affidavit in support of any change in names appearing in different documents if any ☐

I certify that the above particulars submitted by me are true and accurate.

........................... ...........................
Date Signature of applicant

(C-7549)

# இலங்கையர்களுக்கான விசா கொள்கையில் மாற்றமில்லை!

## அமெரிக்க தூதரகம் அறிக்கை

இலங்கையர்களுக்கான அமெரிக்க விசா கொள்கையில் எந்த மாற்றமும் செய்யப்பட வில்லை என்று அமெரிக்க தூதரகம் அறிவித் துள்ளது. இலங்கையர்கள் அமெரிக்காவுக்கு விசா இன்றிப் பயணிக்கலாம் என்று பரவிய வதந்திகளை அடுத்தே, அமெரிக்கத் தூதர கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இலங்கையர்களுக்கான அமெரிக்க விசா கொள்கை தொடர்பாக எந்த மாற்றமும் செய்ய ப்படவில்லை. இதுதொடர்பாக பரவும் வதந்திகள் முற்றிலும் பொய்யானவை என்றும் அமெரி க்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஆடம்பர சிறை நாளை திறப்பு!

தங்காலை சிறைச்சாலைக்குப் பதிலாக, அம் பாந்தோட்டை அங்குனுக கொலபெலஸ்ஸவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வசதிகளை கொண ்டுள்ள ஆடம்பர சிறைச்சாலை, நாளை 16 ஆம் திகதியன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த சிறைச்சாலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைக்கவு ள்ளதாக அறிய முடிகின்றது. முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தின் போது, சுமார் 40 ஏக்கர் விசாலமான நிலப்ப ரப்பில் நிர்மாணிக்கப்பட்ட இந்த சிறைச்சா லைத் தொகுதியின் நிர்மாணப்பணிக ளுக் காக 4,500 மில லியன் ரூபாய் ஒதுக் கப்ப ட்டுள்ளது. இந்த சிறையில் மட்டும் 1,500க்கு மேற்பட்ட கைதிகளைத் தடுத்து வைக்கலாம். சர்வதேசதரம் மற்றும் மனிதஉரிமைகளை மதிக்கும் வகையில், இலங்கையில் நிர்மாணிக் கப்பட்ட முதலாவது சிறைச்சாலை இதுவாகும். இந்த சிறைச்சாலைக்குள் நீச்சல்தடாகம், முழுமை யான விளையாட்டு ஆய்வ ரங்கம் மற்றும் விளை யாட்டு மைதா னம் ஆகியனவும் உள்ளன. தமிழீழவிடுத லைப் புலிகள், 2009 ஆம் ஆண்டு தோற கடிக்கப்பட்டதன் பின் னர், கடந்த அரசாங்க த்தினால் பல்வேறான சொகுசு மாளிகை கள் கட்டப்பட்டன. அதி லொன்றாகவே இது அமைந்துள்ளது என்று சமூக வலைத் தளங்க ளில், விமர்சனங்கள் முன்வைக்கப்பட் டன. இந்தச் சிறைச் சாலை யின் நிர்மாணப்ப ணிகள், 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதியன்று ஆரம்பிக் கப்பட் டமை குறிப்பிடத்தக் கது. (இ-3-7)


40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற

"றோயல் குளுக்கோஸ்"

PACKED BY: ROYAL INDUSTRIES, Colombo-13 TP:- 077 727 7670

தற்போது புதிய வடிவில்!!




இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

"றோயல் குளுக்கோஸ்"

தொடர்புகளுக்கு

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567


## பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

வலம்புரியின் பிரதேச செய்தியாளராகப் பணியாற்ற விரும்பு கிறீர்களா? உங்கள் விருப்பத்தை நிறைவு செய்ய உங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உங்கள் விண்ணபத்தில் முழுப்பெயர், பால், பிறந்ததிகதி, நிரந்தர முகவரி, தபால்முகவரி, தொலைபேசி இலக்கம், தொழில், தே.அ.அ.இல, திருமண நிலை, கல்வித்தகைமை, தங்களைக் கேட்டறியக்கூடிய இருவரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் எதிர்வரும் **20.02.2017** இற்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

## மரண அறிவித்தல்

## திருமதி ஐயாத்துரை பாக்கியம்

**(ஓய்வுநிலை சிற்றூழியர், விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி.)**



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் சென்.செபஸ்தியார்வீதி கோண்டா வில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத் துரைபாக்கியம் அவர்கள் 12.02.2017 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை (ஓய்வுநிலைக் காவலாளி, விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற கந்தன்- சீதை அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்ன வன்-முத்தி தம்பதியரின் அன்பு மருமக ளும் காலஞ்சென்ற நடராசா (TTI Railway), கந்ததியாகராசா ஆகியோரின் சகோ தரியும் புஸ்பமலர், மங்களமலர், சந்திரமலர், பங்கஜமலர் (நூலக சேவகர், பொது நூலகம், பிரதேச சபை, நல்லூர்), ஜெயே ந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற புவனேந் திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கதிரேசு (ஓய்வுநிலை சிற்றூழியர், மாநகர சபை, யாழ்ப்பாணம்), தேவராசா (Painter), யோகநாதன் (ஓய்வுநிலை சிற்றூழி யர், மாநகரசபை, யாழ்ப்பாணம்), பஞ்சலிங்கம் (நிர்வாக அதிகாரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வடமாகாணம், மத்தியஸ்தர்சபை உறுப்பினர், நல்லூர்), லோகேஸ்வரி, றமோணா (சுவிஸ்), யசோதரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி), ரவிவர்மன் (லீசிங் சிங்கர்), பிரதாபன் (லண்டன்), உமாசுதன் (சவுதி), திலீபன் (பொலிஸ் உத்தியோகத்தர், முல்லைத்தீவு), அகலிகா (பரிசாரகர், ஆயுர்வேதம், யாழ். மாநகர சபை), வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகலா, சுசிகலா (விடுதிப் பொறுப்பாளர் தாதியர் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம்), விஜிகலா (லண்டன்), ஜெயகலா (முன்பள்ளி ஆசிரியர், மஞ்சவனப்பதி கொக்குவில்), ரேணுகலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சுதேச மருத்துவத் திணைக்களம், யாழ்ப்பா ணம்), றொபின்சன் (பெல்ஜியம்), றொபினா (லண்டன்), ஜோன்சன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழக கல்லூரி), அம்பிகை (3ஆம் வருட சட்டபீட மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), துவாரகன்(கலைப்பீடம், 1ஆம் வருட மாணவன், கிழக்குப் பல்கலைக்கழகம்), கவிதா, வனிதா, அஞ்ச லீனா (சுவிஸ்), எலியாஸ் (சுவிஸ்), யோனாஸ்ட் (சுவிஸ்), உமாகரன் (உத்தி யோகத்தர் யா/ பல்கலைக்கழகம்), தயாளன் (மேற்பார்வை உத்தியோகத்தர், பிரதேசசபை நல்லூர்), லோகேஸ்வரன் (லண்டன்), சத்தியரேகா (பெல்ஜியம்), சூரியலெனின் (லண்டன்), நேசகுமார் (மாநகரசபை, யாழ்ப்பாணம்), ஜோன்சன் (உத்தியோகத்தர், மாநகரசபை) ஆகியோரின் பேர்த்தியும், துளசி(சட்டபீட 3 ஆம் வருட மாணவி, கொழும்பு பல்கலைக்கழகம்), செந்தூரன் (புகுமுகமாணவன் பல்கலைக்கழகம்), ஜஸ்மி (மாணவி, நாமகள் வித்தியாலயம், கொக்குவில்), செந்தாளன், ஜெனாளன் (மாணவன் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), தர்சனா (லண்டன்), லிதுசன் (லண்டன்), றொசானா (லண்டன்), அஸ்வின் (லண்டன்), பர்வதன், பிளஷிங், அகஸ்ரின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, துரையன், கண்மணி, பூரணம், தங்கம்மா, செல்லம்மா மற்றும் கோபாலப்பிள்ளை, தவமலர் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.02.2017 புதன்கிழமை இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (7947)

தகவல்:
குடும்பத்தினர்
077 638 2294, 077 948 2808

## இராசி பலன்

15.02.2017
(மாசி 03, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
சதுர்த்தி காலை 7.26 மணிவரை
அத்தம் பிற்பகல் 1.03 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம், பூரட்டாதி<br>இரவு 1.36 மணிக்கு<br>துலா-சந் | | |
| புத | | | ராகு |
| | சனி | குரு | சந் |

**மேடம்:** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பெற்றோர் மீது பிரியம் கூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு.

**கடகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், உறவினர்கள், நண்பர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பொருட் சேர்க்கைக்கு வழிவகுப்பீர்கள்.

**கன்னி:** நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், தேகநலனில் கவனம் தேவை, குடும்பத்தினர் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது.

**துலாம்:** வழக்கமாகச் செய்யும் பணியில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், சுப செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உள்ளம் மகிழும் செய்தியொன்று வந்து சேரலாம், குடும்பத்தினர் உங்களைப் புரிந்துகொண்டு நடப்பர்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்:** பகையொன்று நட்பாகலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்:** வரவும், செலவும் சமமாகும் நாள், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்ப்பது நல்லது, பிரயாணத்தின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்:** புத்திசாதுரியமாக நடந்து சாதனை படைக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள் போசன நன்மையுண்டு.

# திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலக பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

நாடகக் கலையின் மேம்பாடு கருதி, செயல்முறை சார்ந்த தேர்ச்சியினை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப்பயிலகம் கடந்த 25 வருடங்களாக நடத்தி வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கை நெறியின 2017ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிநெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தினை தரம் 11,12,13 இல் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் பி.ப 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறவுள்ளதுடன் போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையாகவும் நடைபெறவுள்ளது.

25.02.2017 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இப்பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை திருமறைக் கலாமன்றத்தின் அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 21.02.2017 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக மீள ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத் துணைக்கலைகள் (வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளிவிதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப்பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும்.


க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பயிற்சிப்பட்டறை கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கு தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் செய்முறை பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 18,19ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இரு நாட்களும் காலை 9 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை நடைபெற வுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 17.02.2017 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக திருமறைக் கலா மன்ற அலுவலகத்தில் தமது பெயர்களை பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கலந்துரையாடல்

சமரச சன்மார்க்க ஞானக்குடிலின் ஏற்பாட்டில் இராமலிங்க சுவாமிகள் காட்டும் மரணமில்லா பெருவாழ்வு பற்றிய கலந்துரையாடல் தினமும் காலை 9 மணிமுதல் இல.25, றக்கா வீதி, யாழ்ப்பாணம் (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக) எனும் முகவரியில் அமைந்துள்ள சமரச சன்மார்க்க ஞானக்குடிலில் இடம்பெறும். மேலதிக தகவல்களுக்கு 077 137 48 16 , 077 277 3301 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (இ-3)

யா/ வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி -2017



யாழ். வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் வெற்றியீட்டிய மாணவனுக்கு விருந்தினர்களால் கேடயம் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# யாழில் டெங்கு நோயை கட்டுப்படுத்த வலுவான செயற்பாடுகள் அவசியம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களது எண்ணிக்கை தீவிர வளர்ச்சி பெற்றுள்ள நிலையில், இதனைக் கட்டுப்படுத்த அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இது குறித்து விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், தற்போது நாடாளாவிய ரீதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், யாழ். மாவட்டத்தில் மாத்திரம் இந்த வருடத்தில் இதுவரையில் 512 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

கடந்த வருடத்தைப் பொறுத்தவரையில் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களது எண்ணிக்கை மிகவும் குறைந்த நிலையில் அதாவது, 33 நோயாளர்களே இனங்காணப்பட்டுள்ள நிலையில், இந்த வருடம் அது ஆரம்ப ஒரு மாதத்திலேயே பல மடங்கு அதிகரித்திருப்பது மிகுந்த ஆபத்தான சூழ்நிலையையே குறித்துக் காட்டுகிறது.

நாட்டில் உள்ளூராட்சி சபைகள் மக்கள் பிரதிநிதிகளற்ற நிலையில் செயற்படுகின்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகின்ற சூழலில், மேற்படி டெங்கு போன்ற நோய்கள் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில், எமது மக்களின் நலன் கருதி, அதிகாரிகள், அக்கறை எடுத்து தீவிர செயற்பாடுகளையும், விழிப்புணர்வு திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பொது அமைப்புகள், தொண்டர் நிறுவனங்கள்,பொலிஸார், சுகாதார பரிசோதகர்கள், புத்தி ஜீவிகள் என அனைத்து தரப்பினரும் தங்களால் இயன்ற ஏற்பாடுகளை மேற்கொண்டு குடாநாட்டில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவுகின்ற அபாய நிலையை தடுக்க முன்வர வேண்டும்.

இது குறித்து வடக்கு மாகாண சபை நிர்வாகம் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

எனினும், அது சாத்தியப்படுமா? என்பது கேள்விக்குறியான நிலையில், எமது மக்கள் இது தொடர்பில் விழிப்புணர்வு பெற்று செயற்பட முன்வரவேண்டும் என்பதுடன், டெங்கு நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய சுய ஏற்பாடுகளையும் சமூக நலன் கருதி மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-3)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'7"
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6926

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 172cm
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ்
NOT PR
எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: B/6928

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 33 செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L/பிரான்ஸ்
தொ.இ: B/6929

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பட்டதாரி/அரசதொழில்
தொ.இ: B/6930

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: சூரிசெவ் 6 இல்
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6950

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 77 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: G/6951

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 45 செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BFA
தொ.இ: G/6952

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 35
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6954

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



60 ஆவது அகவையில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
திருமதி யோ.சுந்தரநேசன்



சேவை விபரம்
- யா/ பரமேஸ்வராக் கல்லூரி 26.03.1990- 22.02.1994
- யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் 23.2.1994-31.9.1995
- யா/ இந்து மகளிர் கல்லூரி 01.10.1995-31.06.1996
- யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 01.07.1996-27.06.1997
- யா/இந்து மகளிர் கல்லூரி 28.06.1997-28.01.2003
- யா/கலட்டி மெ.மி.பாடசாலை 29.01.2003-30.01.2012
- யா/ ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் 31.01.2012- இன்று வரை

Best Wishes


எமது பாடசாலையில் 2012.01.31 இல் இருந்து 2017.02.15 வரை ஆங்கில பாடத்தினைப் புகட்டி அர்ப்பணிப்புடன் சேவையாற்றி இன்று 60 ஆவது அகவையில் ஓய்வு பெறும் திருமதி யோகேஸ்வரி சுந்தரநேசன் அவர்களை அவரது ஓய்வுக்காலத்தில் அவர்தம் பிள்ளைச் செல்வங்களின் சிறப்புக்களையும் பெருமைகளையும் கண்டு நீடூழிகாலம் மகிழ்வுடன் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
(7931)

# மரண அறிவித்தல்

## அமரர் தம்பு யோகராசா

### (சாணைக்கடை உரிமையாளர், நவீன சந்தை அருகாமை, யாழ்ப்பாணம்)



அல்லாரையைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு யோகராசா அவர்கள் 13.02.2017 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சின்னமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பு வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயராஜ் (பிரான்ஸ்), றஜீவன் (பிரான்ஸ்), சயூனா (பிரான்ஸ்), மயூரா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகரன் (பிரான்ஸ்), நிரோசி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷராவின் பேரனும் பரஞ்சோதி, யோகமலர், கலாராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 16.02.2017 நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் எழுதுமட்டுவாழ் இராமியன் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்
077 335 1388

(7352)

## பிலவுக்குடியிருப்பு மக்களின்
# தொடர் போராட்டம் தொடர்பில் இன்று அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடல்



பிலவுக்குடியிருப்பு விமானப் படையினர் முகாம் முன்பாக தொடர் போராட்டத்திற்கு 15 ஆவது நாளாகவும் மக்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

காணி விடுவிப்பு தொடர்பில் வடக்கு மாகாண சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கடந்த வாரம் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற அமர்வின் போது பல தரப்பினராலும் மேற்படி விடயம் தொடர்பில் எடுத்து கூறப்பட்டும் விசேடமான ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை கொண்டு வந்து இது தொடர்பில் கலந்துரையாடியும் எந்தவிதமான தீர்ப்புகளும் எட்டப்படவில்லை.

இந் நிலையில் அடுத்த கட்டமாக பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு எவ்வாறான முடிவுகள் எட்டப்படவேண்டுமென கலந்துரையாடுவதற்காக கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பிலவுக்குடியிருப்பு தொடர் போராட்டம் நடைபெறும் இடத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஒன்று கூடி கலந்துரையாடினர்.

இதன்போது எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக வடக்கு மாகாண சபை முதலமைச்சர், உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலாளருடன் இன்று மாலைக்கு முன்னர் சந்தித்து மாவட்ட செயலாளரிடம் தொடர் போராட்டம் தொடர்பில் கலந்துரையாடுவது எனவும் மேலதிகமாக மக்களின் போராட்டத்திற்கு தீர்வு காணும் பொருட்டு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் கலந்துரையாடுவது எனவும் கலந்துரையாடப்பட்டது. (2-281)

வன்னி வலம்

# ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன் மிக விரைவில் காணி விடுவிக்க நடவடிக்கை

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்ததாக முல்லை. அரச அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு விமானப்படையினர் முகாம் முன்பாக நேற்று 15 ஆவது நாளாகவும் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் சந்தித்துள்ளார்.



இதன் போது மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தன்னுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு உங்களின் காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் மிகவிரைவில் காணி விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் மக்களுக்கு அறிவிக்குமாறு தன்னிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.


இதேவேளை காணி விடுவிப்பு நடைபெறும் வரை போராட்டத்தை கைவிட்டு ஏற்கனவே நீங்கள் குடியிருந்த கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்திற்கு திரும்பி செல்லுமாறு மீள் குடியேற்ற அமைச்சர் அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது பிலவுக்குடியிருப்பு மக்கள் தாங்கள் ஏற்கனவே தெரிவித்ததைப்போன்று எங்களின் காணிகளினுள் எப்போது காலடி வைத்து குடியேறுகின்றோமோ அப்போது தான் போராட்டத்தைக் கைவிடுவோம் என உறுதியாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அரச அதிபர் அவ்விடத்தை விட்டு சென்றார்.

அதன் பின்னர் விமானப் படையின் முகாம் முன்பாக மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இச் சந்திப்பில் மாவட்ட அரசாங்க அதிபருடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன், முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் சமுகமளித்திருந்தனர். (2-281-15)

# அம்பகாமம் காட்டுக்குள் ஆட்லறி செல்கள் மீட்பு



(பரந்தன்)

முல்லைத்தீவு அம்பகாமம் காட்டுக்குள் இருந்து நேற்றுக்காலை புலிகள் பயன்படுத்திய ஆட்லறி செல்கள் மீட்கப்பட்டுள்ளன.

விமானப்படையினரால் குறித்த ஆட்லறி செல்கள் கண்டுபிடிக்கப்பட்டு குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு எறிகணையும் 16 கிலோ கிராம் கொண்டது என்றும் விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த அம்பகாமம் காட்டுப் பகுதிக்கு அருகில்தான் 2009 இற்கு முன் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய விமானப் படைத்தளம் காணப்பட்டது.

தற்போது குறித்த இடம் விமானப்படையினரின் பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

## அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

(குருமன்காடு)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தின் பின்னர் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெறவுள்ளதாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியலாய பாடசாலை அதிபர் ரி.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (2-250)

# காணி விடுவிக்கும்வரை போராட்ட களத்தில் இருந்து விலகுவதில்லை

## முல்லை. மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் ஆதரவு



(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பு மக்கள் வெயில், மழையில் காய்ந்து கருகித் தமக்கான காணிவிடுவிக்கும் வரை போராட்டத்தில் இருந்து விலகுவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் நேற்று 15 ஆவது நாளாகவும் தமது தொடர் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இப் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்கும் முகமாக நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் கலந்து கொண்டு மக்களுடன் கலந்துரையாடினர். (2-281)

# நாம் ஏமாற்றப்பட்டது போல நீங்களும் ஏமாறாதீர்கள் உறுதியுடன் போராடுங்கள்




பிலவுக் குடியிருப்பு மக்களின் காணிவிடுவிப்பு தொடர் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக நேற்று பிற்பகல் 2 மணியளவில் தமிழ் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தை சார்ந்த உறுப்பினர் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வருகை தந்து கலந்துரையாடினர்.

இதில் பங்கேற்றவர்கள் கூறுகையில்,

வவுனியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு ஏமாற்றம் அடைந்தது போலல்லாது உறுதியுடன் தொடர்ந்து தீர்வு கிடைக்கும் வரை போராடுமாறு கூறினர். (2-28)

# கனகபுரம் துயிலும் இல்லக்காணியில் வேலி அமைக்கும் பணி நிறுத்தம்

(பரந்தன்)

கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லக் காணியில் தனியார் ஒருவரினால் அமைக்கப்பட்ட வேலி பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் பிடுங்கி எடுக்கப்பட்டதுடன் வேலி அமைக்கும் பணியும் நிறுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லக் காணியில் நேற்று செவ்வாய்க் கிழமை தனியார் ஒருவரினால் வேலி அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த மாவீரர் துயிலுமில்லம் காணியின் ஒரு பகுதி தனக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து தனிநபர் ஒருவர் கூலியாட்களை கொண்டு கம்பி கட்டைகள் போட்டு வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

கடந்த நவம்பர் மாதம் மாவீரர் நாள் நிகழ்வில் பொதுச் சுடரேற்றி நிகழ்வு நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் எல்லையிட்டு வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அமைக்கப்பட்ட வேலிகளை பிடுங்கி எடுத்ததோடு, வேலி அமைக்கும் பணியையும் நிறுத்தியுள்ளனர். (2-312)

# ஹயஸ் ரக வாகனம் மோதுண்டு விபத்து; மூன்று பேர் படுகாயம்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவின் ஊடாகச் செல்லும் முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் புளியம் பொக்கணை பகுதிக்கும், வெலிக்கண்டல் சந்திக்கும் இடைப்பட்ட வீதியில் உள்ள 06 மைல்கலில் உள்ள 02 ஆவது இரும்புப் பாலத் தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் ஹயஸ் ரக வாகனம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 3, பேர் படுகாயமடைந்த நிலையில் பொது மக்களால் மீட்கப்பட்டு தருமபுரம் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்களுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

பரந்தன் பகுதியில் இருநது முல்லைத்தீவு நோக்கி பயணித்த ஹயஸ் ரக வாகனமே விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தருமபுரம் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# காணி விடயத்தில் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை சுழற்சி முறையில் நேற்று முதல் உணவு தவிர்ப்பு

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக அமர்ந்திருக்கும் மக்கள் உறுதிபட தெரிவிப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் பொதுமக்களின் காணிகளிலுள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் 16 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் பிலவுக் குடியிருப்பு விமானப் படையினர் முகாம் முன்பாக தமது காணிகளை கையகப்படுத்தியுள்ள இராணுவத்தை வெளியேறக் கோரியும் இரவு-பகலாக கொட்டகை அமைத்து அமர்ந்திருக்கும் மக்களுக்கு ஆதரவு வழங்கியும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக அமர்ந்திருக்கும் மக்களின் நேற்றுடனான 12 ஆவது நாளான தொடர் போராட்டம் நேற்றுடன் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்பு போராட்டமாக மாறியுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களுடைய பிரச்சினை அவர்களுக்கு மட்டும் உரியது அல்ல. அதே போல் பலர் இருக்கிறோம். அவர்களுக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும்.

அதே போல் எங்களுடைய காணிகளும் விடுவிக்கப்படவில்லை. எங்களுடைய காணிகள் விடுவிக்கும் வரை நாங்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்று வரும் காணி விடுவிப்பு போராட்டம் நேற்றுடன் 12ஆவது நாளாக தொடர்ந்தது.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை ஆரம்பித்த வேளை அங்கு விரைந்த மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளரிடம் தாங்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் தங்களுக்கென வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்து விட்டதாகவும் தெரிவித்தனர். இதன் போது கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர்,


இதற்கான எந்த விதமான பதிலும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை. அறிவித்தல் எதுவும் கிடைக்கப்பெறும் பட்சத்தில் உங்களுக்கு அறிவிப்போம் எனக் கூறினார்.

இதுவரை எந்தவொரு தீர்வும் முன்னெடுக்கப்படாத நிலையில் போராட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக இன்று (நேற்றில்) இருந்து சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டமாக மாறவுள்ளதாக அம்மக்கள் உறுதிபடத் தெரிவித்தனர்.

இந்நிலையில் இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படாத காரணத்தால் இன்று (நேற்று) முதல் சுழற்சி முறையிலான உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (2-281)

## காப்பெற் வீதிகளில் நெல் உலரவிடும் அவலம் இவ்வருடமும் தொடர்கிறது

### விவசாயிகள் கவலை



கிளிநொச்சியில் தற்போது காலபோக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் அறுவடை செய்த நெல்லை உலர வைப்பதற்கான போதியளவு உலரவிடும் தளம் இன்மையால் இவ் வருடமும் காப்பெற் வீதிகளில் நெல் உலர விடும் அவலம் தொடர்கிறது என விவசாயிகள்கவலை தெரிவித்துள்ளனா.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நெல் உலர வைப்பதற்கான தளங்கள் இல்லாததன் காரணமாக வீதிகளில் நெல்லைக் காய வைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயக் குழுக் கூட்டங்களில் நெல் உலர வைப்பதற்கான தளங்கள் இல்லாததன் காரணமாகவே ஈரமான நெல்லை விற்பனை செய்வதாகவும் ஒவ்வொரு கமக்கார அமைப்புக்கும் குறைந்தது நெல் உலர வைப்பதற்கான ஒரு தளத்தினையாவது அமைத்துத் தாருங்கள் என விவசாயிகளினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேறாததன் காரணமாகவே விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட நெல்லை வீதிகளில் உலர வைக்கின்ற நிலை நடைபெறுகின்றது. கடந்த வருடங்களிலும் இந்த நிலைமை தொடர்ந்தது.

இந்த நிலைமையினால் கடந்த காலங்களில் பல வீதி விபத்துகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

## போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு தமிழ்த்தேசிய முன்னணியினர் ஆதரவு



பிலவுக் குடியிருப்பு விமானப்படை மற்றும் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ள நிலையில், கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (2-4)

## துயிலுமில்லக் காணிக்கருகில் அமையவிருந்த பொலிஸ் நிலையத்திற்கு மாற்றிடம் வழங்கல்



மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு பிரதேசச் செயலகப் பிரிவிற்குட்பட்ட பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லக் காணிக்கருகில் அமைக்கப்படவிருந்த பொலிஸ் நிலையம் அமைக்க மாற்றிடம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம் அமைந்துள்ள காணக் கருகில் அமைக்கப்படவிருந்த பொலிஸ் நிலையம் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் தலையீட்டை அடுத்து நிறுத்தப்பட்டு பொலிஸ் நிலையம் அமைக்க வேறு இடத்தில் காணி வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் பண்டிவிரிச்சான் பகுதியிலுள்ள மாவீரர் துயிலுமில்லக் காணி பொலிஸாரினால் பொலிஸ் நிலையம் அமைப்பதற்காக அண்மையில் துப்பரவு செய்யப்பட்டதையடுத்து அப்பிரதேச மக்கள் இச்சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம் பகுதிக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர், மடு பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸ் அதிகாரியுடன் கலந்துரையாடி மாவீரர் துயிலுமில்லத்தின் புனிதத் தன்மையைக் கருத்தில் கொண்டு அப்பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் அமைவது பொருத்தமற்றது எனத் தெரிவித்து, அங்கிருந்து குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் பொலிஸ் நிலையம் நிறுவுவதற்கு அரச காணியில் இருந்து இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிடைக்கப்பெற்றது. (2-15)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## உணவுப் பழக்கவழக்கங்களாலும் வாழ்வியல் முறைகளாலும் ஆட்கொல்லி தொற்றா நோய்களை வெற்றி கொள்வோம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

நீரிழிவு, உடற்பருமன், அதிககொலஸ்ட்ரோல்போன்ற நிலைமைகளைக் கட்டுப்படுத்த உடற்பயிற்சி அத்தியாவசியம். உடற்பயிற்சியின் போது உடலிலுள்ள சீனிச்சத்து அனைத்தும் இன்சுலின் உதவியால் அழிக்கப்பட்டு வருகிறது. இதனால் சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கும். உதாரணமாக மேற்படி நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக உடற்பயிற்சி இன்று நேற்று அல்ல பண்டைக்காலம் தொட்டே நடைமுறையில் இருந்து வருகிறது.

சுஸ்ருதர் எழுதிய சுஸ்ருதா சம்கிதா என்ற நூலில் நீரிழிவு நோயுள்ள நபர் தினமும் 4 மைல் தூரம் நடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். தற்கால ஆராய்ச்சிகளும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதால் உடற்பயிற்சி முக்கிய பங்கு வகிப்பதை நிரூபித்துள்ளன. உடற்பயிற்சியை வழக்கமாக செய்துவரின் பல்வேறு நன்மைகளைப் பெறமுடியும்.

1.இயல்பான இரத்த சீனியின் அளவைப் பெறல்

2.எடை குறைதல்

3. மாரடைப்பு அபாயம் குறைதல்

4.உடற்தகுதி உண்டாதல் போன்ற நன்மைகள் கிடைக்கும். உடற்பயிற்சியை ஆரம்பிக்கும் முன்னர் மருத்துவரைக் கலந்தாலோசித்து மேற்கொள்வது சிறந்ததாகும். சித்தர்கள் யோகாசன முறையைக்கூட மேற்படி தொற்றா நோய்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதில் முக்கியமான சிகிச்சையாக உள்வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்க விடயம். மேற்படி தொற்றாநோயின் தாக்கமுடையவர்கள்

'உற்சாகத்தில் சிறுவர்களாக இருக்கவேண்டும்

உணவுவிடயத்தில் இளம் பெண்ணாகஇருக்கவேண்டும்

வாழ்க்கை முறையில் கூலித் தொழிலாளியாக வேண்டும்'

ஏனெனில் சிறுவர்கள் ஓய்ந்திராமல் ஏதாவது செய்து கொண்டிருப்பார்கள். இதனால் அவர்களின் உடல் ஆரோக்கியமாக இருக்கும். இளம் பெண்கள் தம் கட்டழகை மாறாது பேணுவதற்காக கண்ட உணவை உண்ணாது பார்த்துப் பார்த்து உண்டு உடலைக் கச்சிதமாக வைத்துக் கொள்வர். கூலித்தொழிலாளி விடிந்தது முதல் இரவு வரை தனது வயிற்றுப்பாட்டிற்காக உழைத்து கொண்டிருப்பதால் உடல் முறுக்கேறி காணப்படும். வசதியானவர்களை விட அவர்கள் நோயால் பாதிக்கப்படுவது குறைவு. இப்படி ஒரு முறையான வாழ்க்கை மேற்கொண்டு வந்தால் தொற்றா நோய் முற்றாகக் கட்டுப்பட்டு விடும்.

பரம்பரை திருமணம், சொகுசான வாழ்க்கை, உடற்பயிற்சி இல்லாமை ஆகிய காரணங்களே தொற்றா நோய்க்கு வழி வகுக்கின்றன. அதாவது உணவிலுள்ள கலோரியை அடிப்படையாக வைத்து உங்கள் எடை மற்றும் உழைப்பிற்கேற்ப உணவுத் திட்டத்தை வகுத்துக் கொள்ளவேண்டும். கலோரி குறைவான உணவுகளை தெரிவு செய்வதுடன் உணவு விடயத்தில் சரியாக நடந்து கொண்டாலே மேற்படி விடயத்தை கட்டுப்பாட்டில் வைத்து விடலாம்.

'உடம்பும் இரும்பும் இருக்கக் கெடும்' என்பது முதுமொழி.

எம் உடலை பேணுவதே ஒரு பிரயாணம் செய்வதற்குச் சமனாகும். முயற்சிகள் இன்றி அப்பியாசம் செய்யாது இருப்போமாயின் மிகவும் குறுகிய காலத்தில் நோய் வாய்ப்படுவதை தவிர்க்க முடியாது. எனவே உடற்பயிற்சி செய்தலை அத்தியாவசியமாக கருதுதல் அவசியமாகும். தீராத வியாதிகள் எமக்கு சம்பவிக்காது இருப்பதோடுநாம் ஆரோக்கியமாக வாழ விரும்பினால் உடல் உழைப்பு விரும்பத்தக்க அம்சமாகும்.

நார்த்தன்மையான தானிய உணவுகளையும் கீரை வகைகளையும் உணவில் கூடுதலாக சேர்த்துக் கொள்ள வேண்டும். முழுக்கோதுமைப் பாண், தவிடு நீக்காத அரிசி, தினை, குரக்கன், சாமை, வரகு என்பவற்றில் நார் அதிகமாக இருப்பதால்மெல்லுவதற்கு அதிக நேரம்பிடிக்கும். ஆனால்வெண் பாண், கேக், வெள்ளையரிசியில் தயாரித்த உணவுகளை விழுங்க அதிக நேரம் பிடிக்காது.

எமது இருவகையான நார்ப் பொருட்கள் அடங்குகின்றன

1.மிக மென்மையான உறிஞ்சும் தன்மையுடைய நார்.

அதாவது தானியத்தை வெளியுறையாக மூடியுள்ளது தவிட்டுப் பகுதியாகும். தானியத்தைச் சுத்திகரிக்கும் போது அல்லது மினுக்கும் போது தவிடு அகற்றப்படுகிறது.


2.கரடுமுரடான வகை நார் காய்கறி, இலை, கீரை, பழம், பனங்கிழங்கு இவற்றில் நார்ப்பொருட்கள் கடினமானவை. இக்கூறுகள் சரிவர உடலில் போனால் உடற்பருமன், மலச்சிக்கல், தொற்றா நோய் என்பன வராது.

தாவர உணவில் உள்ள போசணைக்கூறுகள் யாவும் தடித்த நுண் மூடிக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய தாவர மூடிகள் வாயினால் மெல்லுதல், மேலும் வயிற்றிலுள்ள அமிலத் தாக்கத்தினாலும் உடைக்கப்படுகின்றன. ஆதலால் மிருகங்களினால் உட்கொள்ளப்படும் தாவரங்களில் உள்ள நார்களின் பௌதிக இயல்புகள் காரணமாக உணவில் அவை சமிபாடு அடைவதற்கு கடினத் தன்மையை ஏற்படுத்துவனவாக மிளிர்கின்றன.

தாவரப் பட்சணியாகிய மிருகங்களும் இரையை மீட்டு அசைபோட்டு இத்தகைய முயற்சியை நிறைவாக்கிக் கொள்கின்றன. ஆயினும் மனிதன் ஏனைய விலங்குகளைப் போலல்லாது தனது உணவைப் பதப்படுத்தி உண்ணப் பழகியதால் அவன் உட்கொள்ளும் உணவுக் கூறுகள் அடங்கியுள்ள நார்மூடிகள் அகற்றப்படுகின்றன. இது இன்றைய பிரச்சினைக்குரிய அடிப்படைச் சிக்கலாக அமைந்து வருகின்றது. இத்தகைய பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்து இயற்கையில் காணும் எல்லாப் பழங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள் முதலானவற்றை மென்று சாப்பிட வேண்டும். ஏனெனில் அவற்றுள் நார்ப்பொருட்கள் உள்ளன.

நார்களுக்கு முக்கியமாக 4 செயற்பாடுகள் உள்ளன.

1.உள்ளெடுக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்துகின்றது



2.காபோவைதரேற்று உறிஞ்சலையும் இன்சுலின் சுரத்தலையும் கட்டுப்படுத்துகிறது.

3. கொலஸ்ட்ரோலிலுள்ள நீர்ப்பாயத்தின் நிலையைக் குறைக்கும்.

4.முக்கியமாக பெருங்குடலின் சுகவாழ்வையும் அதன் செயற்பாட்டையும் ஆளும் முக்கிய காரணியாகும்.

இவற்றால் மலங்கழித்தால் இலகுவாகின்றது.

உள்ளெடுக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்தல்.

நாம் அனைவரும் எமது உணவைச் சுவைத்து, ரசித்து உண்கிறோம். மிகக்குறுகிய நேரத்தில் தம் உணவை உண்பதை அவதானிக்கலாம். அண்மைக்காலமாக தொலைக் காட்சியின் முன் அமர்ந்து உணவை மென்று விழுங்காது கெதியில் விழுங்கும் பலரையும் காண்கின்றோம். திருப்தி ஏற்பட்டதும் உணவு உண்பதை நிறுத்துகிறோம். திருப்தி ஏற்படும் நிலைப்பாட்டை திட்டவட்டமாக அறிய முடியாமல் இருக்கிறது. திருப்தி ஏற்படுவதற்கான காரணியாக

1.வாயிலிருந்து சிறுகுடலுக்கு செல்லும் குழாயின் அசையும் நிலை

2.சிறு குடலும் வயிறும் பருத்துக் காணப்படல்

3.திரவ இழையை பித்தப்பைகள் கைனினில் இரத்தக் குளுக்கோசு நிலை உயர்தல்

4.இதனால் இன்சுலின் அதிகம் சுரத்தல்

மேலும்

5. நார்கள் வாயினதும் வாயிலிருந்து சிறுகுடலுக்கும் செல்லும் குழாயினதும் அசைவை அதிகரிக்கும்.

6.தவிட்டுடன் கூடிய அரிசி, மண்ணிற பாண், குரக்கன், சோளம், தினையில் தயாரித்த உணவுகள் விழுங்க நீண்ட நேரம் முயற்சிக்க வேண்டும். அதன் ருசியும் குறைவாகும்.

7.சிறுகுடல் வயிற்றையும் விரிவடையச் செய்யும். அதிக நீரை தாங்கி அதிக நீரை உறிஞ்சும் தன்மையை உண்டாக்கும்.

8.நார் அதன் நிறையின் பன்மடங்கு நிறையுள்ள நீரை உறிஞ்சி உணவை பருமனாக்கும்.

இரத்தத்தில் கொலஸ்ட்ரோலின் அளவை உணவில் நாம் எடுக்கும் எண்ணெயின் அளவும் நிர்ணயிக்கும். தேங்காய் எண்ணெய் முதலியவற்றில் காணப்படும் நிரம்பிய கொழுப்பமிலமும் கிளிசரோலும் செறிவு குறைந்த புரதமும் உருவாவதால் அளவுக்கதிகமான கொலஸ்ட்ரோல் கலங்களிலும் நாடிகளிலும் அடைபட உதவும். நல்லெண்ணெய், சோயா எண்ணெய், சோளம் எண்ணெய், கருஞ்சீரக எண்ணெயில் நிரம்பாத கொழுப்பமிலமும் கிளிசரோலும் செறிவுகூடிய கொழுப்பு புரதமும் உருவாக உதவுவதால் கலங்களிலும் நாடிகளிலும்உள்ள கொலஸ்ட்ரோல் அவ்விடங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்றது.

இதனாலேயே இருதய பாதிப்புள்ளவர்கள் நிரம்பாத கொழுப்பமிலம் கொண்ட நல்லெண்ணையப் பயன்படுத்துவர்.

இதனால் எள் எண்ணெயை நல்லெண்ணெய் என பெயரிட்டனர். அத்துடன் இருதய நோயுள்ளவர்கள் எள்ளைக் கழுவி சுத்தம் செய்து வெயிலில் காயவைத்து பனங்கற்கண்டு சேர்த்து துவைத்து எள்ளுப்பாகு, எள்ளுருண்டை செய்து உண்ணலாம். இதன் மூலம் மலமும் இளகி இலகுவாக வெளியேறுவதன் மூலமும் செறிவு கூடிய கொழுப்பு புரதமும் உருவாவதாலும் கொலஸ்ட்ரோல் குறைவதற்கான வாய்ப்பு நிச்சயம் உண்டு.

எள்ளில் காணப்படும் கொழுப்பு உறையாத தன்மையுடைய அதியுயர் கொழுப்பாகும் (Unsaturated). அத்துடன் இதில் காணப்படும் கரோட்டின் உயிர்ச்சத்து A இற்கு முன்னோடியாக இருப்பதால் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

அத்துடன் வேர்க்கொம்பையும் நிலப்பனங்கிழங்கையும் சம அளவு எடுத்து பொன் வறுவலாக வறுத்து இடித்து, பின் துணியில் போட்டு அரித்து (வஸ்திர காயம்) நுண்ணிய தூளாக பெற்று பின் இரண்டையும் கலந்து சூரணம் செய்து காலை, மாலை சாப்பாட்டுக்கு பின் ஒரு கிராம் எடுத்து வந்தால் கொலஸ்ட்ரோலின் அளவு நன்கு குறையும்.

மதிய உணவில் சோறு குறைவாகவும் காய்கறி, இலைக்கறி சுண்டல், துவையல் கூடுதலாகவும் சேர்த்து உண்ணுவது சிறப்பாகும். பழங்களை ஓரளவு சாப்பிடலாம். வயிறு அரைவாசி நிரம்பினால் போதும். நீர் போதியளவு அருந்த வேண்டும். காலையில் 700-900 மில்லி லீற்றர் கொதித்தாறிய நீர் எடுக்கவேண்டும். சிறிய மீன்களைப் பயன்படுத்தலாம். காய்கறிகளை பச்சையாக தயாரித்து ஒரு வேளையாவது உண்ணல் வேண்டும்.

முன்னைய எம் பாரம்பரிய உணவு கலாசாரங்களை மீள் நோக்கிப் பார்த்து குரக்கன் கூழ், ஒடியல் கூழ், கீரைப்பிட்டு, கீரை வடை, கூட்டாஞ் சோறு, இலைகாய்கறி சேர் பொங்கல், காய்கறிகள் யாவும் சேர்த்து ஒரு கறி போன்றவற்றை கடைப்பிடித்தல் அவசியமாகும்.


# வீரவன்சவுக்குப் பிணை; எதிர்ப்பு தெரிவிக்க திகதி

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவுக்கு பிணை வழங்குவது குறித்து ஆட்சேபனைகள் இருப்பின் அதனை இம்மாதம் 27 ஆம் திகதியன்று நீதிமன்றில் தெரிவிக்குமாறு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

அரச வாகனங்களை மோசடியாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள விமல் வீரவன்ச, பிணை கோரி கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. ஏ. களுஆராச்சி முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-3-7)






# பன்றிக் காய்ச்சல் குறித்து அவதானம் மக்களே!



"முதன்முதலில் 1918-ல் மெக்ஸிக்கோவில் கொசுக்களால் பன்றிகளிடம் இருந்து மனிதனுக்கு இந்தக் காய்ச்சல் பரவியதாக அறிவித்தார்கள். ஆனால், 2009-ல் பரவிய பன்றிக் காய்ச்சல், மனிதர்களிடம் இருந்துதான் மனிதர்களுக்குப் பரவியது. இப்போது வந்திருப்பதும் மனிதர்களிடம் இருந்தே மனிதர்களுக்குக் காற்று மூலம் பரவும் தொற்றுநோய் தான். பன்றிக்கும் இந்தக் காய்ச்சலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. "சாதாரணக் காய்ச்சலுக்கும் பன்றிக் காய்ச்சலுக்கும் என்ன வித்தியாசம்? எப்படி அடையாளம் கண்டுகொள்வது?"

"சாதாரண வைரஸ் காய்ச்சல் மூன்று நாட்களில் குணமாகிவிடும். ஆனால், பன்றிக் காய்ச்சல் மூன்று நாட்களுக்குப் பிறகுதான் தீவிரமாகும். இருமல், தும்மல் அதிகமாக இருக்கும். தலைவலி, தொண்டை வலி, உடம்பு வலி, கண்களில் எரிச்சல் என்று பாதிப்புகள் தொடர்ச்சியாக வரும். சிலருக்கு இடைவிடாத வாந்தி, வயிற்றுப்போக்கும் வரலாம். இருமல் அதிகமாகி எந்த மருந்துக்கும் கட்டுப்படாது. இருமலை அலட்சியப் படுத்தினால், நுரையீரலின் தசைகள் ஆரோக்கியத்தை இழந்து சுருங்க ஆரம்பித்துவிடும். இதனால், சுவாசிக்கும் காற்று நுரையீரலுக்கு முழுமையாகச் சென்று சேராது. நாளடைவில் நுரையீரலின் தசைகள் இறுகி, "நிமோனிக் கன்சாலிடேஷன்' ( Pneumonic Consolidation) என்ற நிலை ஏற்பட்டு நுரையீரல் கல் போல இறுகிவிடும். தசைகள் இறுகிப்போவதால் சுவாசிக்க முடியாமல் மூச்சுத்திணறல் ஏற்பட்டு, நெஞ்சு வலி வரும். எக்ஸ்ரே எடுத்துப்பார்க்கும்போதுதான் இது தெரிய வரும். "நிமோனிக் கன்சாலிடேஷன்' என்ற இந்தக் கட்டத்துக்கு ஒருவர் சென்றுவிட்டால், அவரை வைத்திய சாலையில் சேர்த்தே ஆக வேண்டும்."

"வராமல் தடுக்கும் வழிகள் என்ன?"

"இருமல், சளி இருப்பவர்கள் இரண்டு மூன்று முறையாவது சோப் போட்டுக் கை கழுவ வேண்டும். நோய் உள்ளவர்களின் கை, கால், வாய் பகுதிகளை மற்றவர்கள் தொடக் கூடாது. சளி, இருமல் தொடர்ந்து இருந்தால், அதை அலட்சியப்படுத்தாமல் உடனே பரிசோதனை செய்துகொள்வது நல்லது. சோதனையின் முடிவில் பொஸிட்டிவ் என்று வந்தால், சிகிச்சைக்காக உடனே அவரைத் தனிமைப்படுத்த வேண்டும்.

காய்ச்சல் வந்தவர்கள் தும்மும்போதும் இருமும் போதும் துணியால் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். கண்ட இடங்களில் எச்சில் துப்புவதும் சளி சிந்துவதும் கூடாது. வோஷ்பேசினில் எச்சில் துப்பினால், தண்ணீரால் வோஷ்பேசினை நன்கு கழுவிவிட வேண்டும். சளி சிந்திவிட்டுக் கை கழுவாமல் இருப்பதும் தவறு. முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்கள் வெளியிடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். கூட்டம் கூடுகிற இடங்களுக்குச் சென்றால், அவரால் மற்றவர்களுக்குப் பரவ வாய்ப்பு அதிகம். அதே போல் நோயாளிகள் உபயோகப்படுத்திய பொருட்களை மற்றவர்கள் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. குறிப்பாக, நோயாளியின் எச்சில் பட்ட டம்ளர், தட்டு போன்றவற்றை மற்றவர்கள் தொடக் கூடாது.."

**Dr.எம். ஆனந்தப் பிரதாப்**

# சுவீடன் வர்த்தக நிபுணர்கள் மூவர் இலங்கைக்கு வருகை

சுவீடனைச் சேர்ந்த மூன்று வர்த்தக நிபுணர்கள் இலங்கை வந்துள்ளனர்.

சுவீடிஷ் தேசிய வர்த்தக சபையும் இலங்கை வர்த்தக திணைக்களமும் இணைந்து இவர்களை இலங்கைக்கு அழைத்துள்ளன.

சுவீடனுக்கான ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபாடுள்ள, இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை இன்று புதன்கிழமை உலக வர்த்தக மத்திய நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

கறுவா, தேயிலை , இயற்கை உணவு பொருட்கள், காய்ந்த தென்னை பொருட்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள், மசாலா வணிக உணவுப்பொருட்கள தொடர்பிலான , விதிகள் மற்றும் உணவு ஏற்றுமதியின் போது கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாடுகள் சுவீடிஷ் சந்தை தகவல் முதலான விடயங்களில் இந்த சந்திபின் போது கவனம் செலுத்தப்படவுள்ளன. (இ-3-7)

# சிறுபான்மையினத்தவர்களால் சிங்களவர் ஒடுக்கப்படுகின்றனர்

## சீலரத்ன தேரர் கொதிப்பு

இலங்கையில் பெரும்பான்மையினரான சிங்கள மக்களை எல்லா விடயங்களிலும் முந்திக்கொண்டு சிறுபான்மையினத்தவர்கள் தற்போது பெரும்பான்மையாக மாறிக்கொண்டு வருவதை தடுக்க முடியாமல் அரசியல்வாதிகள் முட்டாள்களாக மாறிவிட்டதாக ஜனசெத்த முன்னணியின் தலைவரான பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பிற்கு கடும் எதிர்ப்பினை வெளியிட்ட அவர், சிங்கள இனத்தவர்கள் எல்லா விடயங்களிலும் ஓரங்கட்டப்பட்டு வருவதாகவும் இந்த நிலைமையை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் ஏற்பட்டுள்ள பல்வேறு குளறுபடிகள் மற்றும் நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்தும் முயற்சியில் ஜனசெத்த முன்னணியின் தலைவரான பத்தரமுல்ல சீலரத்ன தேரர் ஈடுபட்டு வருகின்றார்.


குறிப்பாக மத்திய வங்கியின் மோசடி தொடர்பான விசாரணை, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள், அதன் நடவடிக்கைகளும் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பத்தரமுல்ல சீலரத்ன தேரர் மக்களைத் தெளிவுபடுத்தி வருகின்றார்.

அதன் ஓரங்கமாக நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் செய்த அவர் நகரிலுள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்களைத் தெளிவூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3-7)

# ரத்ன தேரர் தொடர்பாக வெள்ளியன்று தீர்மானம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா, இல்லையா என்பது குறித்து கலந்துரையாட ஹெல உறுமயவின் மத்திய குழு, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கூடவுள்ளது. அன்றைய தினத்தில் ரத்ன தேரரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பிலும் முக்கிய தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது. (இ-3-7)



# உச்ச நீதிமன்றம் நேற்று அ
# சசிகலாவின் முதல்வர் கன




(டில்லி)

தமிழகம் மட்டுமல்லாமல் நாடே உற்று நோக்கிய வழக்கில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. கடந்த சில நாட்களாக தமிழக முதல்வர் பதவியை கைப்பற்றும் முயற்சியில் சசிகலா தீவிரமாக இறங்கினார். முதல்வர் பன்னீர்செல்வத்திடம் கட்டாயப் படுத்தி இராஜினாமா கடிதத்தை வாங்கியதாக புகார் எழுந்தது.

அதன் பின் தமிழகத்தில் அடுத்தடுத்து இதுவரை கண்டிராத பல சம்பவங்கள் அரங்கேறின. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வலுக்கட்டாயமாக கூவத்தூரில் சசிகலா தரப்பால் சிறை வைக்கப் பட்டனர். இந்நிலையில் சசிகலாவின் அரசியல் கனவை தகர்த்தெறியும் தீர்ப்பு நேற்று உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

சசிகலா, சுதாகரன், இளவரசி உள்ளிட்டோர் மீதான சொத்து குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பினாகி சந்திரகோஸ், அமித்தவராய் அடங்கிய அமர்வின் பெஞ்ச் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

**சிறைக்கு செல்கிறார் சசிகலா:**

சசிகலா உள்ளிட்ட மூவருக்கும் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அளித்த தீர்ப்பை உறுதி செயதுள்ள நீதிமன்றம், உடனடியாக பெங்களூர் கீழமை நீதிமன்றத்திற்கு சென்று சரணடையுமாறு உத்தரவிட்டது.தண்டனை உறுதி செய்யப்பட்டதையடுத்து மூவரும் சிறைக்கு செல்வது உறுதியாகியுள்ளது. பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் மூவரும் சரணடைந்த பின்னர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்படுவர்.

சசிகலாவிற்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளதால், அவரால் அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது. சசிகலாவிற்கான தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளதால் போயஸ் தோட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். உச்சநீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் காரணமாக சசிகலாவின் அரசியல் வாழ்க்கை தற்போது அஸ்தமனமாகியுள்ளது.

**வழக்கு விபரங்கள்:**

தமிழக முதல்வராக ஜெயலலிதா கடந்த 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாக ரூ.66 கோடி சொத்து சேர்த்ததாக கடந்த 1996 இல் தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்தது. அதில், ஜெயலலிதா, சசிகலா நடராஜன், சுதாகரன், இளவரசி ஆகியோர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது.இந்த வழக்கை பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜான் மைக்கேல் குன்ஹா விசாரித்தார்.

அவர் கடந்த 2014 செப்டெம்பர் 27 இல் தீர்ப்பளித்தார். தீர்ப்பில், 'குற்றச்சாட்டுகள் போதிய ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறி, ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேருக்கும் தலா 4 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

மேலும், ஜெயலலிதாவுக்கு ரூ.100 கோடியே 1 இலட்சம், சசிகலா நடராஜன், சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு த...
கப்பட்டது.இ...
பேரும் கர்நா...
தனர். இந்த ...
நீதிபதி கும...
ளித்தார். அ...
4 பேரையும் ...

இந்த தீர்...
பொதுச் செ...
றத்தில் மேல்...

வழக்கு நீதி...
ராய் ஆகியோ...
வந்தது. இந்த ...



## அரசியல் வாழ்வு அஸ்

## உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து பொலிஸ் கட்டுப்பாட்டில் சொகுசு விடுதி



சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலாவுக்கு 4 ஆண்டுகள் சிறையும் ரூ.10 கோடி அபராதமும் விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நிலையில், பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கூவத்தூர் சொகுசு விடுதியுள்ளது.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா உள்ளிட்ட 3 பேரும் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.சசிகலா, சுதாகரன், இளவரசிக்கு 4 ஆண்டுகள் சிறையும் ரூ.10 கோடி அபராதமும் விதித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து, அதிமு.க. எம். எல்.ஏக்கள் தங்கியுள்ள கூவத்தூர் சொகுசு விடுதிக்குள் பொலிஸார் நுழைந்தனர்.

சசிகலாவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அ.தி.மு.க. எம். எல். ஏக்களை, காஞ்சிபுரம் மாவட்டம் கல்பாக்கம் அடுத்த கூவத்தூர் பேட்டையில் உள்ள தனியார் சொகுசு விடுதியில் கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை முதல் 7 நாட்களாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 200 அதிவிரைவுப் படையைச் சார்ந்த வீரர்கள் சொகுசு விடுதிக்குள் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் கூவத்தூர் சொகுசு விடுதி பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. (இ-12)

## 21
## நீதி



# அதிரடித் தீர்ப்பு; ...வு கலைந்தது



...தலா ரூ.10 கோடியே 10 ஆயிரம் அபராதம் விதிக... இந்த தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா உள்ளிட்ட 4 ...நாடக உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய... வழக்கை விசாரித்த கர்நாடக உயர் நீதி மன்ற... ...மாரசாமி, கடந்த 2015 மே 11 ஆம் திகதி தீர்ப்ப... ...தில் ஜெயலலிதா, சசிகலா நடராஜன் உள்ளிட்ட ...யும் விடுதலை செய்வதாக தீர்ப்பளித்தார்.

...தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசும், தி.மு.க. ...யலாளர் அன்பழகன் சார்பிலும் உச்ச நீதிமன ...மல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது. ...த நீதிபதிகள் பினாகி சந்திரகோஸ், அமித்தவ ...கியோர் முன்னிலையில் விசாரணைக்கு ...இந்த வழக்கின் இறுதி கட்ட விசாரணை முடிவ...டைந்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் திகதி தீர்ப்பு தள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த 7 மாதங்கள் ஆகியும் இந்த வழக்கில் தீர்ப்பு வெளியிடப்படாமல் இருந்தது. இதையடுத்து, கடந்த வாரம், கர்நாடக அரசு சார்பில் மூத்த சட்டத்தரணி துஷ்யந்த்தவே உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி பினாகி சந்திரகோஸ், ரோஹிண்டன் நாரிமன் ஆகியோர் அடங்கிய டிவிஷன் அமர்வு முன்னிலையில் ஆஜராகி, "இந்த வழக்கில் எப்போது தீர்ப்பளிக்கப்படும்?" என்று நீதிபதிகளிடம் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதில் அளித்த நீதிபதிகள், "இன்னும் ஒரு வாரத்தில் தீர்ப்பளிக்கப்படும்" என்று கூறியிருந்தனர். இதனையடுத்து நேற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரை கர்நாடக உயர் நீதிமன்றம் விடுதலை செய்தது. இதை எதிர்த்து கர்நாடக அரசு கடந்த 2015 ஜூன் 23 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் பினாகி சந்திரகோஸ், அமித்தவராய் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மேல்முறையீட்டு வழக்கில் கடந்த 2015 பெப்ரவரி 23 ஆம் தினதி தொடங்கி இறுதி வாதம் நடைபெற்றது.

கர்நாடக தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி துஷ்யந்த்தவே 4 நாட்களும், அரசு சிரேஷ்ட சட்டத்தரணி ஆச்சார்யா 5 நாட்களும் வாதிட்டனர்.

ஜெயலலிதா தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி நாகேஸ்வரராவ் 4 நாட்களும், சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சேகர் நாப்டே 4 நாட்களும் வாதிட்டனர். வழக்கின் இறுதி வாதம் மட்டும் 17 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-12)





## ...தமனமானது

## பன்னீர்செல்வத்தை வற்புறுத்தியதை மறைமுகமாக ஒப்புக்கொண்ட சசிகலா

(சென்னை)

வற்புறுத்தலின் பேரிலேயே முதல்வர் பதவியை ராஜினாமா செய்தேன் என பன்னீர்செல்வம் கடந்த 7 ஆம் திகதி பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

இதனை மறைமுகமாக ஒப்புக் கொள்ளும் விதமாக நேற்று முன்தினம் சசிகலாவின் பத்திரிகையாளர் சந்திப்பு அமைந்துள்ளது.

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், சட்டசபையில் ஓ.பி.எஸ்ஸின் நடவடிக்கை எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. உங்களுக்கே எங்கள் ஆதரவு, நாங்கள் இருக்கிறோம் என ஓ.பி.எஸ்ஸிடம் துரைமுருகன் கூறினார்.

ஆனால், அதற்கு ஓ.பி.எஸ். எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. உங்கள் ஆதரவு தேவையில்லை என அவர் கூறியிருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

எனவே, இதற்கு மேல் விட்டால் சரிவராது என நான் முடிவெடுத்தேன். இந்த நிலைக்கு தள்ளியவர் ஓ.பி.எஸ்.தான் என கூறினார். சசிகலாவின் இந்த பேச்சு எனனை கட்டாயப்படுத்தி இராஜினாமா செயய வைத்தார்கள் என ஓ.பி.எஸ்.கூறியதை உண்மையாக்கியுள்ளது.

அவர் தானாக முன்வந்து சசிகலாவை முதலமைச்சராக்க இராஜினாமா செய்யவில்லை என்பது தெளிவாகிறது. (இ-12)

## முதலமைச்சர் பன்னீர்செல்வம் வீட்டில் அ.தி.மு.க.தொண்டர்கள் ஆர்ப்பரிப்பு



(சென்னை)

சசிகலாவுக்கு எதிரான சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நேற்றுக் காலை உச்ச நீதிமன்று பரபரப்பு தீர்ப்பு அளித்தது. இதனை தொடர்ந்து முதலமைச்சர் பன்னீர்செல்வத்தின் வீட்டில் உற்சாகம் கரை புரண்டது.

அங்கு திரண்டிருந்த தொண்டர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். அவர்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர். சசிகலாவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

சசிகலாவுக்கு எதிரான தீர்ப்பால் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



நேற்றுக் காலை ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு தெரிவிக்க வந்த ஆதரவாளர்கள் ஏராளமானோர் ரோஜாப்பூ மாலையுடன் வந்திருந்தனர். (இ-12)

## ...ஆண்டுகளுக்குப் பின்னர் ...தி நிலைநாட்டப்பட்டுள்ளது

### ...ஸ்டாலின் கருத்து



(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 3 பேரும் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

இந்நிலையில் இதுகுறித்து நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து கூறிய ஸ்டாலின் சொத்துக்குவிப்பு வழக்கில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. முன்பு நீதிபதி குன்ஹா தந்த தீர்ப்பு அப்படியே நிலை நாட்டப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்பு மிக்க வகையில் இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

அரசியல்வாதிகள் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்கு இந்தத் தீர்ப்பு சான்று. தீர்ப்பு வந்துவிட்ட காரணத்தால் நிலையான ஆட்சியை அரசியல் சாசன சட்டப்படி தமிழகத்தில் உருவாக்குவதற்கு, ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (இ-12)

# ஆயுதக் களஞ்சியசாலை வழக்கு; மார்ச் 15 மீளவும் விசாரணைக்கு

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவன்கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உட்பட எழுவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணைக்கு மார்ச் 15ஆம் திகதியை நிர்ணயித்த கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார, எழுத்து மூலமான அடிப்படை எதிர்ப்பைச் சமர்ப்பிக்குமாறு இரு தரப்பினருக்கும் உத்தரவிட்டார்.

அவன்கார்ட் மெரிடைம்ஸ் நிறுவனத்தினூடாக மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை அமைத்து, அரசாங்கத்துக்கு 11.4 பில்லியன் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச, ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். குற்றச்சாட்டை முன்வைக்கும் அந்த ஆணைக்குழு சான்றுப்படுத்துவது அவசியம் என, சந்தேதகநபர்கள் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ரொமேஷ் டி சில்வா நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். ஆணையாளரால் சான்றுப்படுத்தப்பட்டு அனுமதி கிடைக்கப் பெறாததன் காரணமாக, சந்தேகநபர்களை விடுவிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அவ்வாணைக்குழுவின் ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய, ஆணையாளரின் அனுமதியுடன் தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என, முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி ஜனக பண்டார கூறினார். வழக்கு ஆரம்பித்த போது, 2 ஆவது சந்கேநபர் நாட்டில் இல்லாததால், அவர் இல்லாமலேயே வழக்கு விசாரணையை முன்னெடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.



அவரை மன்றில் ஆஜராகுமாறு பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணையைக் கொண்டு சென்ற போது அவர் வீட்டில் இருக்கவில்லை எனவும் கிராம சேவையாளரூடாக அவர் நாட்டில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டதாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் உப-பொலிஸ் பரிசோதகர் தோரவகே பிறேமசிறி தெரிவித்தார். இவ்விடயத்தை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினூடாக உறுதிப்படுத்தியதாகவும் திஸநாயக்க முதியன்சலாகே தமயந்தி ஜயரத்ன என்ற அந்த சந்தேகநபர், 2015.12.11 அன்று நாட்டை விட்டு வெளியேறியதாகவும் அறிவித்தார்.

2ஆவது சந்தேகநபர் இல்லாவிடினும் வழக்கு விசாரணையை நடத்தமுடியும் என நீதவான் அறிவித்ததையடுத்து, வழக்குரைஞர் ரொமேஷ் டி சில்வாவினால் அடிப்படை எதிர்ப்பு ஆற்றுப்படுத்தப்பட்டது. எதிராளி மற்றும் முறைப்பாட்டாளர் சார்பிலான அடிப்படை எதிர்ப்பை எழுத்து மூலம் மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதவான் வழக்கு விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (இ-3-7)

# துமிந்தவின் உடல்நிலை தொடர்பில் அறிக்கையிட விசேட வைத்தியகுழு

## 28 ஆம் திகதி காலக்கெடு



முன்னாள் எம்.பியும் மரண தண்டனைக் கைதியுமான துமிந்த சில்வாவின் உடல்நிலை தொடர்பாக, விசேட வைத்திய குழுவின் அறிக்கையை எதிர்வரும் 28ஆம் திகதியன்று சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் அருணி ஆட்கல நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

துமிந்த சில்வாவின் உடல் கோளாறுகள் தொடர்பில் பரிசீலித்து, அறிக்கையிடுவது தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜயசிங்கவுக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. அதற்கு அனில் ஜயசிங்கவினால் வழங்கப்பட்ட பதில் கடிதத்தில், துமிந்த சில்வாவைப் பரிசீலிப்பதற்கு நரம்பியல் வைத்திய நிபுணர் அடங்கிய விசேட வைத்திய நிபுணர் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார். விசேட வைத்திய நிபுணர் குழுவை அமைக்குமாறு உதரவிட்ட நீதவான், துமிந்த சில்வாவை, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக்கொண்டு சென்று சோதனைக்கு உட்படுத்தி, அந்த அறிக்கையை எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். 2010, 2011 மற்றும் 2013 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஆவணங்களைக் கையளிக்காததன் காரணமாக, இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. முன்னாள் எம்.பியான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட துமிந்தவுக்கு மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3-7)

# திடீரென சிங்கப்பூருக்குப் பறந்தார் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திடீரென நேற்று முன்தினம் இரவு சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டு எதிரணியைச் சேர்ந்த எட்டுப் பேர் கொண்ட குழுவொன்றுக்குத் தலைமையேற்று மகிந்த ராஜபக்ஷ இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் இந்தப் பயணத் திட்டம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. மகிந்த சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றமைக்கான காரணங்கள் ஏதும் இதுவரையில் வெளியாகவில்லை. (இ-3-7)



## இன்று ஒரு தகவல்

### எல்லோரும் வேண்டும்

இந்த எண்ணத்தை நெஞ்சில் நிரப்பிக் கொண்டால் போதும். நம்மிடம் பிறர் பாராட்டக் கூடிய பல நல்லியல்புகள் வந்து குடியேறிவிடும்.

இதை நம்ப உங்கள் மனம் மறுக்கிறதா? ஏற்கும்படிச் சொல்கிறேன்.

ஒருவர் நமக்கு வேண்டும் என்றால் நாம் என்ன செய்கிறோம்? அவரிடத்தில் அன்பையோ மரியாதையோ செலுத்தத் தொடங்கிறோம்

மனித இனம் கண்ணாடியைப் போன்றது. நீங்கள் அன்பு செலுத்தினால் அதுவும் செலுத்தும். நீங்கள் மரியாதைக் குறைவாகப் பேசினால் அதுவும் பேசும். என்னங்க! என்றால் அது சொல்லுங்க எனும். டேய்! என்றால் அது என்னடா என்று கேட்கும்.

எனவே நாம் காட்டும் மரியாதையும் அன்பும் நமக்கே திருப்பப்படும். எனவே முதற் கட்டமாக எல்லோரும் வேண்டும் என எண்ணுபவர்கள் மற்றவர்களை, மிகச் சாதாரணமானவர்களைக் கூட ஓர் ஈயைப்போல், ஒரு நாயைப்போல் பாராமல் மனிதராக மதித்து நடக்கத் தொடங்குவார்கள். இந்த சிறுமன மாற்றம் ஓர் அற்புதமான ஆரம்பமாகும்.

எல்லோரும் வேண்டும் என எண்ணுபவர்கள் பணத்தை மட்டுமே கணக்குப் பார்க்காமல் மனத்தைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்குவார்கள். சிறுசிறு செல்வுகளைப் பொருட்படுத்தாமல் செய்வார்கள்.

எல்லோரும் வேண்டும் என்பவர்கள் தரம் பார்த்து பழகுவதை நிறுத்திக் கொள்வார் கள். அனைத்து மட்டத்திலும் மனிதர்களைத் தெரிந்திருந்தால்தான் நமக்கு வேலை ஆகும் என்பதை இவர்கள் உணர்ந்திருப்பார்கள். கலெக்டரைத் தெரிந்து மனுக் கொடுத்தாலும் கிளார்க்தான் அதை செய்து முடிக்க வேண்டும். அந்தக் கிளார்க்கை மதிக்காமல் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

பல இடங்களில் மேல்மட்டத்தில் இருப்பவர்களால் முடியாமல் போகும் விடயங்களும் கூடக் கீழ் மட்டத்தில் இருப்பவர்களால் எளிதில் முடிக்கப்பட்டு விடுவது உண்டு என்பது இவர்களுக்குத் தெரியும்.

பொல்லாதவர்களுடன் பழகாதே என்பது ஓர் அழுத்தமான தத்துவம். அதற்காக அவர்களை வெறுப்பதோ பகைத்துக் கொள்வதோ புத்திசாலித்தனமாகாது. காரணம் அவர்களால் ஏற்படக்கூடிய உபத்திரவங்களை அவர் களுடன் பட்டும் படாமலும் பழகித்தான் தவிர்க்க முடியும்

தெருக் கூட்டுபவரும் குளியலறையைக் கழுவுபவருங்கூட நமக்கு வேண்டும். இவர்கள் இல்லாவிட்டால் எல்லாம் எவ்வளவு நாறிப் போகும்!

இவன் வேண்டாதவன், இவன் வேண்டியவன் என்ற பாகுபாட்டை ஏகமாக மனசுக்குள் வைத்துக் கொள்வது நல்லது அல்ல. இவர்களுடன் பழகுவதால் நமக்கு என்ன இலாபம் என்று தராசுத்தட்டைத் தூக்கிப் பழகுவதுகூட நல்லது அல்ல.

முன் பின் தெரியாதவர்களோ அல்லது நமக்கு வேண்டப்படாதவர்களோகூட நமக்கு எந்த அளவுக்கு உதவ முடியும் என்பதை ஊகித்து அறியும் சக்தி நமக்கு இல்லை.


தொடர்புகளை அதிகரித்துக்கொண்டே போகும் போது அது எந்த அளவுக்கு மலர்ந்து விரிந்து வாசம் தரும் என்பதை அனுபவசாலிகள் நன்கு உணர்வார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1

♦ பின்வருவனவற்றுள் இரண்டு உருவங்கள் ஒத்த தன்மை யுடையவை. வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக

01.



1) 2) 3)


02.



1) 2) 3)

♦ கீழே தரப்பட்ட சொற்களுக்கு பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

03. ஓடு மெதுவாக, கால்கள் அற்றது



1) 2) 3)

♦ 04.மரப்பொந்து, தாவரவுண்ணி, பேசும்




1) 2) 3)

♦ 05. கூட்டில் உள்ள எண்களுக்குப் பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண்களைக்கொண்ட கூட்டைத் தெரிவுசெய்க.

11 + [16 + 10] = 37


1. [14 + 12]    2. [20 + 3]    3. [14 + 11]


06. வெற்றுக்கூட்டுக்குள் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




1) 2
2) 5
3) 1

07. இவ்வுருவை தளவாடியில் அவதானிக்கும்போது தோன்றும் சரியான உருவைத் தெரிவுசெய்க.



1 2 3

♦ தொடர்பை விளங்கி பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

08. நெல் நாற்று போல மூங்கில் ..........................................

1. கன்று    2. தாள்    3. பிள்ளை

09. மாலதி பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப்பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டுவருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும் யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள். அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான கூற்று.

1. பொதுநலவாதி    2. வள்ளல்    3. சுயநலவாதி


10. குமார் ஒரு மணித்தியாலயத்தில் செய்து முடிக்கும் வேலையை முகுந்தன் 25 நிமிடங்களில் செய்து முடிப்பான். முகுந்தன் 1 மணி 40 நிமிடத்தில் செய்து முடிக்கும் வேலையை குமார் எவ்வளவு நேரத்தில் செய்து முடிப்பான்?

1. 3 மணித்தியாலம் 40 நிமிடம்
2. 4 மணித்தியாலம் 15 நிமிடம்
3. 4 மணித்தியாலம்

11. வகுப்பிலுள்ள பிள்ளைகளில் ஒவ்வொரு 8 பேருக்கும் 3 பேர் பரீட்சையில் சித்தியடையமாட்டார்கள் என அறியப்பட்டது. அதன்படி சித்தியடையக் கூடியவர்கள் 25 பேர் எனில் அவ்வகுப்பிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?

1. 35    2. 45    3. 40

♦ கீழ்வரும் படங்களினை அடிப்படையாகக்கொண்டு 12ஆம்,13ஆம் வினாக்களுக்கு விடை தருக.



ரூபா 40.00    ரூபா 30.00    ரூபா 45.00

12. 1 மாம்பழம் 1 அன்னாசிப்பழம் வாங்க எவ்வளவு பணம் தேவை?

1. ரூபா 20.00    2. ரூபா 30.00    3. ரூபா 15.00

13. 5 அப்பிள்கள் வாங்கும் பணத்திற்கு எத்தனை மாம்பழங்கள் வாங்கலாம்?

1. 5 மாம்பழங்கள்    2. 10 மாம்பழங்கள்    3. 2 மாம்பழங்கள்

♦ பின்வரும் பாடலை வாசித்து 14ஆம், 15ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

*எண்ணையும் எழுத்தையும்*
*கண்ணெனக் கற்று*
*நல்ல விழுமியங்களை*
*நாளும் கடைப்பிடி*


14. கண் போலக் கருத வேண்டியவை எவை?

1. விழுமியங்கள்    2. எண் எழுத்து    3. நற்பழக்கங்கள்

15. தினமும் கடைப்பிடிக்க வேண்டியவை?

1. நல்ல விழுமியங்கள்    2. நல்ல கல்வி    3. நன்நடத்தை

16.



உருவில் உள்ள சதுரங்களினதும் முக்கோணிகளினதும் எண்ணிக்கை முறையே

1) 5, 16    2) 4, 15    3) 16, 5

17. 2016ஆம் ஆண்டு 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?

1) 6    2) 7    3) 5

18. பாரதி பாடசாலை 2014ஆம் ஆண்டு தமது வெள்ளிவிழாவைக் கொண்டாடியது எனின் அப்பாடசாலை வைரவிழாவை எத்தனையாம் ஆண்டு கொண்டாடும்?

1. 2049    2. 2048    3. 2050

19. பிரசாத் கேசவனின் தந்தையாவார். பிரகாஷ் பிரசாத்தின் தம்பியாவார். நிவேதிகா கேசவனின்ஒரே அக்கா ஆவார். நிவேதிகாவுக்கும் பிரகாஷிற்கும் இடையிலான உறவுமுறை யாது?

1. பெறாமகள் - சித்தப்பா
2. மருமகள் - மாமா
3. பெறாமகள் - பெரியப்பா

♦ பின்வரும் கோவையைப் பார்த்து 20, 21ஆம் வினாக்களுக்கு விடை தருக.

1) 8 △ 4 = 16 □ 4

20. △ என்ற குறியீடானது எதனைக் குறிக்கின்றது?

1. கூட்டல்    2. கழித்தல்    3. பெருக்கல்

21. □ குறியீடு எதனைக் குறிக்கின்றது?

1. பெருக்கல்    2. கூட்டல்    3. வகுத்தல்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1

22. அமாவாசை தினத்தில் இரவு வானில் பூரணச்சந்திரன் தோன்றும் இக்கூற்று தொடர்பாகக் கூறக்கூடியது.
   1. இது எப்போதும் நிகழும் 2. சில வேளைகளில் நிகழும்
   3. நடைபெற முடியாத நிகழ்வு

23. A என்பவர் வீட்டில் இருந்து வடக்கு நோக்கி 200m சென்று பின் அங்கிருந்து 100m கிழக்கு நோக்கி சந்தையை அடைந்தார். இப்போது A என்பவர் வீட்டிற்கு எத்திசையில் நிற்கின்றார்.
   1. வாயு மூலை 2. அக்கினி மூலை 3. ஈசான மூலை


24. முரளி தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற பாதையை உரு காட்டுகின்றது. அவன் பாடசாலைக்குச் செல்லும்போது எத்தனை தடவைகள் இடதுகைப் பக்கம் திரும்பியுள்ளான்?




1) 3 2) 7 3) 6


25. புதுவருடத்திற்கு 8 மாணவர்கள் தமக்கிடையே வாழ்த்து அட்டைகளை பரிமாறிக் கொண்டனர். அவர்களுக்கிடையே பரிமாறப்பட்ட வாழ்த்தட்டைகள் எத்தனை?
   1) 28 2) 30 3) 56

26. உருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?



1) 4
2) 6
3) 5

♦ ஒரு வகுப்பில் மாணவர் விரும்பும் பூக்கள் தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து விடை எழுதுக




27. மல்லிகைப் பூவை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?
   1) 5 2) 6 3) 9

28. மல்லிகையையும் தாமரையையும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
   1) 1 2) 3 3) 9

29. வவுனியாவில் புறப்பட்ட புகையிரதத்தில் 18 ஆண்களும் 10 பெண்களும் ஏறினர். அடுத்த புகையிரத நிலையத்தில் 3 ஆண்கள் இறங்கினர். 5 பெண்கள் ஏறினர். தற்போது புகையிரதத்தில் உள்ள பயணிகள் எத்தனை பேர்?
   1) 28 2) 36 3) 30

30. ராஜாவின் வயது அவனது தந்தையின் வயதின் அரைவாசியாகும். அவனது தந்தையின் வயது 34எனின் இருவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
   1) 51 2) 68 3) 50

31. 10 படிகள் உள்ள படிக்கட்டில் A முதல் படியிலும் B 10ஆம் படியிலும் நிற்கின்றனர். A ஒரு படியில் ஏறும்போது Bஇரு படிகள் இறங்கினால் அவரகள இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?
   1) 4 2) 5 3) 6

32. W.W.W என்பதன் விரிவாக்கம் யாது?
   1. மின்னஞ்சல் 2. இணையம் 3. வையக விரிவு வலை

33. குமரன் 18 விசுக்கோத்துப் பெட்டிகளை கடையில் வாங்கி வீட்டிற்கு கொண்டு வரவேண்டியிருந்தது.அவன் ஒரு தடவைக்கு 4 விசுக்கோத்து பெட்டிகளையே கொண்டு வரமுடியும். இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டுவர குறைந்தபட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?
   1) 4 2) 5 3) 6

34. கணேஸ் ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதேவேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை கணேஸிற்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
   1. ரவி 2. கணேஸ் 3. மோகன்

35. மிகச் சரியான வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.
   1. நோயாளர்கள் நோய்க்குரிய மருந்தை அளவாகவும் ஒழுங்காகவும் எடுக்க வேண்டும்.
   2.நோயாளர்கள் தினமும் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும்.
   3.நோயாளர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

36. ஒரு மாணவன் அதிகமாக வாழைப்பழத்தை சாப்பிட்டதால் நோய்வாய்ப்பட்டான். இதற்குப் பொருத்தமான பழமொழி எது?
   1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
   2. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
   3. பேராசை பெருந்தரித்திரம்.

37. 3m நீளமும் 2m உயரமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 500ml வர்ணப்பூச்சு தேவை. 6m நீளமும் 3m உயரமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு ml வர்ணம் தேவை?
   1) 1000 ml 2) 1500 ml 3) 1200 ml

38. ஒழுங்குபடுத்துக.
   A - புகையிரதத்தில் ஏறுதல்
   B- பயணச்சீட்டு பெறல்
   C - பொதிகளை இருக்கையின் மேல் வைத்தல்
   D - ஆசனத்தில் அமர்தல்
   E - புகையிரத நிலையம் செல்லுதல்
   1. E, B, A, C ,D 2. A, D, E,B, C 3. C,D,E,A, B

♦ மேசைப்பந்துப் போட்டியில் ஒரு பாடசாலையின் குழு மாணவர்கள் ஒவ்வொரு சுற்றிலும் பெற்ற வெற்றி விபரங்கள் வருமாறு.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1ம் சுற்று | △ | △ | ○ | ✡ |
| 2ம் சுற்று | ✡ | ✡ | ○ | △ |
| 3ம் சுற்று | ✡ | △ | ○ | ○ |

△ - வெற்றி
✡ - சமநிலை
○ - தோல்வி

39. மூன்று சுற்றுக்களிலும் கூடுதலாக வெற்றி வாய்ப்பை பெற்ற குழு எது?
   1. B 2. D 3. A

40. மூன்று சுற்றுக்களிலும் தோல்வியைப் பெற்ற குழு எது?
   1. A 2. B 3. C

## பகுதி 1 இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 3 | 21. 3 | 31. 1 |
| 2. 1 | 12. 1 | 22. 3 | 32. 3 |
| 3. 2 | 13. 2 | 23. 3 | 33. 1 |
| 4. 3 | 14. 1 | 24. 1 | 34. 2 |
| 5. 1 | 15. 1 | 25. 3 | 35. 1 |
| 6. 3 | 16. 1 | 26. 2 | 36. 2 |
| 7. 2 | 17. 2 | 27. 1 | 37. 2 |
| 8. 1 | 18. 1 | 28. 2 | 38. 1 |
| 9. 3 | 19. 1 | 29. 3 | 39. 1 |
| 10. 3 | 20. 2 | 30. 1 | 40. 3 |

# அவுஸ்திரேலியாவில் பிரதமருக்கு வரவேற்பு



அவுஸ்திரேலியாவுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மெல்பேர்ன் விமான நிலையத்தை நேற்றுச் சென்றடைந்துள்ளார்.

அங்கு விக்டோரியா மாநில முதலமைச்சர் டானியல் அன்றூஸ் பிரதமர் உள்ளிட்ட தூதுக் குழுவினரை வரவேற்றுள்ளனர்.

பிரதமரின் உத்தியோகபூர்வ விஜயத்தின் நிகழ்ச்சி நிரல்கள் நேற்று முதல் ஆரம்பமாகியது. அமைச்சர்களான விஜித் விஜயமுனி சொய்சா, அர்ஜுன ரணதுங்க, பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா ஆகியோரும் பிரதமருடன் சென்றுள்ளனர். (இ-7)

# மாணிக்கக்கல் அகழ்வு; ஐந்து பேர் கைதாகினர்

(கொழும்பு)

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கெசல்கமுவ ஆற்றிற்கு அருகாமையில் டின்சின் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்து கொண்டிருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி நேற்று அதிகாலை 2 மணியளவில் பொகவந்தலாவ பொலிஸாரினால் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்திய பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-3-7)

# ஆசிரியர்கள் நேற்றும் போராட்டம்





வடமாகாண கல்வியமைச்சினால் ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அநீதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்க கோரியும் வெளிமாவட்ட சேவை நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் நேற்றைய தினம் இரண்டாவது நாளாக செம்மணி வீதியிலுள்ள வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் அலுவலக முன்றலில் தீர்வு கிடைக்கும் வரையான தமது தொடர் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டத்தில், கடந்த ஜனவரி 10 ஆம் திகதி தமது வெளிமாவட்ட சேவை நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களால் நடத்தப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்ட ஆசிரியர்களில் சிலர் ஒழுக்க விதி முறைகளுக்கு அப்பால் செயற்பட்டதாக கூறி பணித்தடை செய்யப்பட்டிருந்தனர்.

அடிப்படையான விசாரணைகள் எதுவுமின்றி - மூன்று ஆசிரியர்களுக்கு பணித்தடை வழங்கப்பட்டது.

ஆனால் - இன்றுவரை அவ்வாசிரியர்களை மீள இணைத்துக் கொள்வது தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளையும் வடமாகாண கல்வியமைச்சு மேற்கொள்ளவில்லை.

அத்துடன் - இடமாற்றச் சபையில் தீர்மானிக்கப்பட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் - ஏனைய தீர்மானங்களுடன் தொடர்புடைய வெளி மாவட்ட கல்வி தொடர்பாக சிந்திக்காமல் - அங்கு நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்களை விடுவிக்காமல் விட்டமை இடமாற்றச்சபையின் தீர்மானம் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான முறைகேடுகள் விசாரிக்கப்படவேண்டும்.

அத்துடன் 5 வருட சேவைக் காலம் நிறைவடைந்த பின்னர் இடமாற்றம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியினை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் என்றும்

இவ்வாறான எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு எமக்கு உரிய தீர்வு வழங்கப்படும் வரை தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம் என தெரிவித்து போராட்டத்தை இரவு பகலாக தொடர்ந்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை நேற்றைய தினம் வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 987


ராதை




அனி





தரண்





கவி




சயன்




சிந்து




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii என்னும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடகொரியா மீது கடும் நடவடிக்கை

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

***(வோஷிங்டன்)* அணு ஆயுதச் சோதனை நடத்தி வரும் வடகொரியா மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.**



பல நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை, அணு ஆயுத சோதனை உள்ளிட்டவற்றை நடத்தி வருவது தொடர்ந்து வருகிறது.


கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா மீண்டும் சோதனை செய்துள்ளது. வடக்கு பியோங்கன் பிராந்தியத்தில் இருந்து இந்த ஏவுகணை பங்யான் ஏவுதளத்தில் இருந்து ஜப்பானின் கடல் எல்லையில் விழும்படி வடகொரியா சோதனை செய்தது.

தடையை மீறி மீண்டும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதனை செய்த வடகொரியாவுக்கு ஜப்பான் கடும் எச்சரிக்கை விடுத்தது.

இந்நிலையில், அணு ஆயுத சோதனை நடத்தி வரும் வடகொரியா மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் உடனான செய்தியாளர்கள் சந்திப்பின் போது, "வடகொரியா ஒரு பெரிய, பிரச்சினை, அதனை நாங்கள் மிகவும் கடுமையாக அணுகுவோம்" என்று தெரிவித்தார். (இ-12)

# தாய்வானில் பேருந்து விபத்து; 32 பேர் பலி! 12 பேர் படுகாயம்




தாய்வானின் தலைநகர் தாய்பேயில் (Taipei), நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட பேருந்து விபத்தில் 32 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 12 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் போது சாரதியின் கட்டுப்பாட்டையிழந்ததே இந்த விபத்து ஏற்படக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பேருந்தில் 44 பேர் பயணித்ததாகவும் அவர்களில் 30 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் ஏனைய 2 பேர் வைத்திய சாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


குறித்த விபத்து தொடர்பில் கருத்து தெரிவித்த அதிகாரி ஒருவர், "இந்த விபத்தில 32 பேர் உயிரிழந்துள்ளமை எம் அனைவரையும் வேதனைக்குள்ளாககியுள்ளது.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்" என தெரிவித்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்த பெரும்பாலானோர் 50 தொடக்கம் 70 வயதுக்கு உட்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)




# அமெ. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இராஜினாமா?



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கல் பிளின் (Michael Flynn) நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தியோகபூர்வமாக பதவியேற்பதற்கு முன், ரஷ்ய அதிகாரிகளுடன் பிளின் தொடர்பு வைத்திருந்தார் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதை தொடர்ந்தே பிளின் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என வெள்ளை மாளிகையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தேசிய பாதுகாப்பு சபையின் தலைமை அலுவலராக கடமையாற்றி ஓய்வு பெற்ற ஜெனரல் கீத் கெலோக் (Keith Kellogg), பதில் தேசிய பாதுகாப்பு ஆலேகசராக நியமிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-12)

# தாக்குதலில் 13 பேர் பலி!

## நாற்பது பேர் படுகாயம்

(லாகூர்)

பாகிஸ்தானிலுள்ள லாகூரின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த குண்டுத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர் என்று அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருந்துகள் விற்பனை குறித்து அரசாங்கத்தின் புதிய விதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நூற்றுக்கணக்கான மக்கள் வீதிகளில் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த கூட்டத்திற்குள் இரு சக்கர வாகனத்தில் சென்ற ஒரு நபர் தனது வாகனத்தை செலுத்தி பின் வெடிகுண்டை வெடிக்க வைத்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலில் 40 பேர் காயம் அடைந்துள்ளனர்.

தலிபான் அமைப்பின் ஒரு பிரிவு இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. (இ-12)

# அமெரிக்க ஜனாதிபதி கனடா பிரதமர் சந்திப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சந்தித்து இருநாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் கடந்த மாதம் 20 ஆம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார். ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல் பல்வேறு நாட்டு தலைவர்களை ட்ரம்ப் சந்தித்து வருகிறார். பல நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் உரையாடி வருகிறார். இந்நிலையில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்தார். அப்போது, இரு நாட்டு உறவுகளை பலப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் இருநாட்டு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து பேசினர். வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து செய்தியாளர்கள் எழுப் பிய கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்வோம் என்றார். மேலும் மெக்ஸிக்கோவை விட கனடா - அமெரிக்கா வர்த்தக உறவு குறித்து கவலை கொள்வதாக தெரிவித்தார்.

முன்னதாக, அகதிகள் மற்றும் முஸ்லிம்கள் விவகாரத்தில் ட்ரம்ப் எடுத்து வரும் நடவடிக்கை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. அப்போது, அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படும் அகதிகள் தங்கள் நாட்டிற்குள் வரலாம் என்று கனடா அழைப்பு விடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# கிளிநொச்சி பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பில் ஆராய்வு

### ஒதுக்கப்பட்ட இடத்தையும் பார்வையிட்டனர்



(பரந்தன் )

கிளிநொச்சி மாவட்டத்திற்கான பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான பேருந்து நிலையம் அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் மற்றும் அமைவிடம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதேவேளை கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினையும் பார்வையிட்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு மாகாண நகர அபிவிருத்திப் பணிப்பாளர், வடக்கு மாகாண தனியார் போககுவரத்துசபைத்தலைவர், தேசியபோக்குவரத்து ஆணைககுழு உத்தியோகத்தர்கள், மாவட்ட வீதி அதிகார சபை உத்தியோகத்தர்கள்,கரைச்சி பிரதேச செயலாளர் ,கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-312)

# வீடுகளுக்கு அனுப்பப்படவேண்டிய

# மின்சாரக் கட்டண சிட்டைகள் வீதிகளில் சிதறிக்கிடக்கின்றன

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் பல கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை மின் கட்டணத்திற்கான சிட்டைகள் வழங்கப்படவில்லை.

ஆனால் பல கிராமங்களுக்குரிய நூற்றுக்கணக்கான மின் கட்டண சிட்டைகள் வீதிகளில் சிதறிக் கிடக்கின்றன என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பரந்தன்-பூநகரி வீதியில் பொறிக்கடவை சந்தி தொடக்கம் குடமுறுட்டி பாலம் வரையான பகுதிகளில் இவ்வாறு கிளிநொச்சி மின்சார சபையின் மின் கட்டண சிட்டைகள் வீதிகளில் எறியப்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.




குறித்த மின் கட்டண சிட்டைகள் கடந்த வருடம் நவம்பர் மாதத்திற்குரியதும், கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம், முரசுமோட்டை, ஊரியான், புன்னைநீராவி, மயில்வாகனபுரம் ஆகிய கிராமங்களுக்குரிய மின் கட்டண சிட்டைகளே இவ்வாறு வீதியில் சிதறிக்கிடக்கின்றன.

மின்சார சபையின் உத்தியோகபூர்வ பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மின்சார சிட்டைகள் எவ்வாறு அலுவலகத்திற்கு வெளியே எடுத்துச்செல்லப்பட்டு வீதியில் எறியப்பட்டது என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

இதேவேளை மேற்படி பிரதேச மக்கள் சிலரிடம் தொடர்பு கொண்டு கடந்த வருடம் நவம்பர் மாத மின் கட்டண சிட்டைகள் கிடைத்துள்ளதா என வினவியபோது,

இதுவரை தங்களுக்கு மின் கட்டணச் சிட்டைகள் கிடைக்கவில்லை என பதிலளித்துள்ளனர்.

அத்தோடு தங்களுக்கு பல மாதங்களுக்குரிய மின்சாரக் கொடுப்பனவுகளை ஒரு சிட்டையில்சேர்த்து வழங்குவதும் நெருக்கடிகளை ஏற்படுத்துகிறது எனவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கினறனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய மின்சார சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது இது விடயத்தில் என்ன நடந்தது? எவ்வாறு வீதிக்கு தங்களின் உத்தியோகபூர்வ சிட்டைகள் சென்றது? என்பது தொடர்பில் ஆராய்ந்து சொல்வதாக பதிலளித்தனர். (2-312)

# காப்புறுதிக்கான இழப்பீட்டை பதிய தவறியவர்களுக்கு இறுதி சந்தர்ப்பம்

### பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி )

பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையின் போது, வரட்சி காரணமாக நெற்செய்கை அழிவடைந்துள்ள விவசாயிகள் உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய தவறியவர்களுக்கு, நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் தினசரி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.சுஜீபரூபன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

உரமானியக் காப்புறுதிக்கான இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்பதிவுகள் தங்கள் பகுதி கமக்கார அமைப்புக்களிற்கு நடைபெற்றவேளை பதிவு செய்யத் தவறியவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக இந்த பதிவுகள் நடைபெறவுள்ளதால் விவசாயிகள் இச்சந்தர்ப்பத்தைத் தவற விடாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# மூன்று சுற்றி வளைப்பு சம்பவங்களில்

# 27கசிப்பு போத்தல்களுடன் சந்தேகத்தில் 4 பேர் கைது

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுககுட்பட்ட தருமபுரம்பொலிஸ நிலையப் பிரிவில் உள்ள தருமபுரம் கிராமத்தில் 3, சுற்றி வளைப்புச் சம்பவங்களின் போது விற்பனை நோக்குடன் சட்டவிரோத மதுபானமான கசிப்பை வைத்திருந்த 4 சந்தேக நபர்களை 27 போத்தல்கள் கசிப்புடன் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய தகவலில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இச்சம்பவம் கடந்த 12, ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம். என்.டீ.சதுரங்கா தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரின் திடீர் முற்றுகையின் போதே விற்பனை செய்யும்நோக்குடன்வைத்திருந்த கசிப்பு 27 போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்தநிலையில், கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்த சந்தேக நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து எச்சரிக்கை செய்யப்பட்டார்.

இதேபோல், 2 போத்தல்கள் கசிப்பை வைத்திருந்த 2 சந்தேக நபர்களுக்கு தலா 8 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 16 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், 24 போத்தல்கள் கசிப்புடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மிக கடுமையாக எச்சரிக்கை விடுத்த நீதிபதி இனி வரும் காலங்களில் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்திற்கு வந்தால் சிறை தண்டனையும் தண்டப்பணமும் வழங் கப்படும் எனவும் எச்சரித்துள்ளார். (2- 15)


# கேள்விக்கான கோருதல்

## மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

1.தலைவர் பெறுகைக்குழுமாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் மாவட்டச் செயலாளரால் கீரிமலையில் மீள் குடியேற்றத்திற்காக அமைக்கப்படவுள்ள 225 வீடுகளுக்கான (அண்ணளவாக 550 சதுரஅடி) கட்டடப்பொருள் விநியோகத்திற்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

2.கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்

3.பொதுநிதிச்சுற்றறிக்கை, 4/2016 இற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது வடமாகாணத்திற்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4.கேள்வியை சமர்ப்பிக்க ஆர்வமுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், கேள்விஆவணங்களை பரிசோதிப்பதற்கும் மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) அலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 8.30 முதல் பி.ப 4 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

5.கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு பதிவு செய்யப்பட்ட வியாபார பதிவுச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரத்தினையும், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினையும், மீளளிக்கப்படாத தொகையான ரூ.1000 ஐ மாவட்டச்செயலக வங்கிக்கணக்கு இலக்கம்-7041946 செலுத்திய பற்றுச்சீட்டினையும் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களினை 15.02.2017 முதல் 01.03.2017 வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

6.பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் 02.03.2017 ஆம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தலைவர் , மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அரசாங்க அதிபர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும். கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்

7.கேள்விகளை சமர்ப்பிக்கும் போது இடது பக்கமேல் மூலையில் கேள்வி கோரலுக்கான மூலப்பொருட்தொகுதியின் வகையும்,அதன் கேள்வி இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

8.கேள்விகள் திறக்கும் போது கேள்விகளை சமர்ப்பித்த கேள்விதாரர் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

9.கேள்வி கோரப்பட்ட பொருட்களின் தரம், பொருட்களின் விநியோகம் தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 27.02.2017 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

கேள்விகோரலுக்கான மூலப்பொருட்களின் தொகுதி

1. கட்டடப்பொருள் 1- சீமெந்து,கம்பிகள்,
2. கட்டடப்பொருள் 2 - மணல்,கல் (கருங்கல்,சுண்ணாம்புக்கல்,கண்டகல்)
3. கூரைவேலைக்கான பொருட்கள் - மரங்கள், ஓடு,ஆணி
4. கதவு மற்றும் யன்னல்களுக்கான மூலப்பொருட்கள்
5. வர்ணம் பூசுவதற்கான மூலப்பொருட்கள்
6. மலசலகூடம் அமைப்பதற்கான மூலப்பொருட்கள் மற்றும் நீர்த்தாங்கி, நீர்விநியோகப்பொருத்துக்கள்.
7. மின் இணைப்புச் செய்வதற்கான மூலப்பொருட்கள்

நா.வேதநாயகன்
அரச அதிபர்,மாவட்டச்செயலாளர்.
யாழ். மாவட்டம்

(சி-7554)




# ஒரு அடியில் இருநூறு பேர்

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் செருப்புத் தைப்பவன் ஒருவன் இருந்தான்.

இங்கு யார் என்னை மதிக்கிறார்கள்? நமக்கு நல்வாய்ப்பு தலைநகரத்தில் காத்திருந்தாலும் காத்திருக்கலாம். இளவரசியைக் கூட நான் மணந்தாலும் மணக்கலாம், என்று நினைத்தான் அவன்.

அறிவு நிரம்பிய அவன் கடைக்குச் சென்று கட்டி வெண்ணெய் வாங்கினான். அதைத் தன் மேசையின் மேல் வைத்தான். நான்கு நாட்கள் சென்றன. அந்த வெண்ணெயைப் பார்த்தான் அவன். அது நிறைய ஈக்கள் இருந்தன.

தான் செய்து வைத்திருந்த செருப்பு ஒன்றை எடுத்தான். அந்த வெண்ணெயில் ஓங்கி அடித்தான்.

நிறைய ஈக்கள் செத்தன. ஏராளமான ஈக்கள் துடிதுடித்தன.

அவற்றை எண்ணினான் அவன். இறந்த ஈக்களின் எண்ணிக்கை இருநூறாக இருந்தது. அடிபட்டவற்றின் எண்ணிக்கை முந்நூறாக இருந்தது.

அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. கடைத் தெருவிற்குச் சென்ற அவன் வீரர்கள் அணியும் சீருடை வாங்கினான்.

அதை அணிந்து கொண்டு கம்பீரமாகத் தலை நகரத்துக்குச் சென்றான்.

அரசவைக்குள் நுழைந்த அவன், அரசர் பெருமானே! என்னை நானே அறிமுகம் செய்து கொள்கிறேன். நான் சிறந்த வீரன். சில நாட்களுக்கு முன் நிகழ்ந்த போரில் நான் ஒருவனே இருநூறு பேரைக் கொன்றேன். முந்நூறு பேரைக் காயப்படுத்தினேன், என்றான்.



அவனை மேலும் கீழும் பார்த்தான் அரசன். உன்னைப் பார்த்தால் வீரனைப் போலத் தெரியவில்லை. தோற்றத்தை வைத்து முடிவுக்கு வரக் கூடாது. உன்னால் எனக்கு ஒரு வேலை ஆக வேண்டும், என்றான்.

கட்டளை இடுங்கள் அரசே! இந்த வாளும் என் உயிரும் இனி உங்களுடையது, என்று வீரமாகப் பேசினான் அவன்.

வீரனே! தலைநகரை அடுத்து உள்ள காட்டில் ஒரு பூதம் உள்ளது அது அவ்வப்பொழுது நாட்டிற்குள் நுழைந்து மனிதர்களைத் தூக்கிச் சென்று சாப்பிடுகிறது.

எத்தனையோ வீரர்கள் அதைக் கொல்லப் புறப்பட்டார்கள். யாருமே உயிருடன் திரும்பவில்லை. இந்த நாட்டு மக்கள் எல்லோரும் அஞ்சி அஞ்சி வாழ்கிறார்கள், என்றான் அரசன். (தொடரும்...)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கிமு 399 - மெய்யியலாளர் சோக்கிரட்டீஸ் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.
- 590 - பாரசீகத்தின் மன்னனாக இரண்டாம் கொஸ்ராவு முடி சூடினான்.
- 1637 - புனித ரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினணட் முடி சூடினான்.
- 1898 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இந்நிகழ்வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1920 - யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80,000 இந்திய, ஐக்கிய இராச்சியம், மற்றும் ஆஸ்திரேலியப் படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.
- 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமானது.
- 1950 - சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1961 - பெல்ஜியத்தில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து அமெரிக்க Figure Skating வீரர்கள் உட்பட 73 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - டொமினிக்கன் குடியரசு விமானம் ஒன்று சாண்டோ டொமிங்கோவில் கடலில் மூழ்கியதில் 102 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - ஒன்பது ஆண்டு கால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.
- 1994 - ரஷ்யா தார்த்தஸ்தானை ஒரு உட்குடி யரசாக இணைத்துக் கொண்டது. தார்த் தஸ்தானின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.
- 1996 - சீனாவின் இண்டெல்சாட் செய்மதி ஒன்று ஏவியவுடனேயே கிராமம் ஒன்றில் வீழ்ந்ததில் பலர் கொல்லப்பட்டனர்.
- 1999 - குர்திஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்துல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படைகளினால் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
- 2005 - யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1564 - கலீலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர், இயற்பியலாளர் . (இ. 1642)
- 1845 - எலீஹு ரூட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் . (இ. 1937)
- 1861 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலர் . (இ. 1947)
- 1861 - சார்ல்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர். (இ. 1938)
- 1873 - ஹான்ஸ் இயூலர்-செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர். (இ. 1964)
- 1922 - டி. பி. விஜயதுங்கா, இலங்கையின் முன்னாள் சனாதிபதி.
- 1949 - அனுரா பண்டாரநாயக்கா, இலங்கையின் அரசியல்வாதி . (இ. 2008)
- 1956 - டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்.
- 1984 - மீரா ஜாஸ்மின், மலையாளத் திரைப்பட நடிகை.

### இறப்புகள்

- 1973 - அமுகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத்தாளர், இலங்கையர். (பி. 1915)
- 1974 - கொத்தமங்கலம் சுப்பு, எழுத்தாளர், நடிகர். (பி. 1910)
- 1983 - ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (பி. 1918)
- 1999 - ஹென்றி கென்டால், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (பி. 1926)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 200 | 200 | 250 | 220 |
| தக்காளி | 50 | 100 | 70 | 50 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 20 | 100 | 80 | 30 | 40 | 50 | 40 |
| கரட் | 40 | 100 | 80 | 50 | 60 | 120 | 30 |
| பூசணி | 50 | 100 | 50 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 60 | 100 | 80 | 100 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 50 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 200 | 120 | 120 | 140 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 160 | 100 | 200 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 200 | 120 | 140 | 120 | 200 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 80 | 50 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 200 | 80 | 110 | 240 | 120 | 280 |
| லீக்ஸ் | 50 | 100 | 160 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 40 | 100 | 60 | 50 | 60 | 80 | 180 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 | 140 | 150 | 240 | 150 |
| முருங்கைக்காய் | 600 | — | 500 | 600 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 140 | 100 | 80 | 120 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 60 | 80 | 120 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 80 | 30 | 20 | 40 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 | 160 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 160 | — | 200 | 150 |
| வெங்காயப்பூ | 50 | 100 | 60 | 50 | 60 | 80 | 60 |
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 60 | 50 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 30 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 60 | 60 | 60 | 60 | 60 |

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும் மேகமேனியனும்; வெல்லாமல் செல்லுக பாவம், பொய்மொழி, கோபம்... - வில்லிபாரதம்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## சிங்கம் சிறை செல்கிறது பன்னீர் ஆள்வாரா?

இறைவன் உனக்குத் தர நினைத்ததை எந்த மனிதனாலும் தடுத்துவிட முடியாது. இறைவன் உனக்குத்தர நினைக்காததை எந்த மனிதனாலும் தந்துவிட முடியாது என்ற தத்துவத்தை ஒரு கணம் சிந்திப்போம்

இந்தச் சிந்தனைக்கு உதவும் பொருட்டு தமிழகத்தின் பக்கம் ஒருதடவை திரும்பிப் பார்க்கலாம்.

தமிழகத்தின் முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதாவின் மரணம் அவருக்குப் பெருமையையும் மங்காப் புகழையும் கொடுத்தது.

சிலவேளைகளில் அவர் இன்று உயிரோடு இருந்திருப்பாராயின் மீண்டும் அவர் நான்கு வருடம் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பதுடன் தமிழகத்தின் முதல்வர் என்ற பதவியை இழந்து - தேடிய சொத்துக்களை இழந்து சிறையில் தட்டேந்தும் அவலம் ஏற்பட்டிருக்கும்.

ஏதோ அவர் செய்த புண்ணியமும் அவர் மீது தமிழக மக்கள் காட்டிய பேரன்பும் காரணமாக நான்கு ஆண்டுகள் சிறையிருக்கும் அவலத்தில் இருந்து அவருக்கு இறைவன் மரணத்தை வழங்கி விடுதலையைக் கொடுத்தான்.

அதுமட்டுமல்ல; தமிழகத்தின் முதல்வர் பதவியில் இருந்த போது அவர் மரணமடைந்ததன் காரணமாக இந்தியா முழுவதும் அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்ததுடன்,

அவரின் ஆட்சியையும் மாட்சியையும் வானுயரப் புகழ்ந்து கொண்டனர். இதுதான் இறைவன் அவருக்குக் கொடுத்த பரிசு.

இது ஒருபுறமிருக்க, ஜெயலலிதாவுக்குப் பிறகு தமிழகத்தின் முதல்வராக வரமுடியும் என்று ஆசை கொண்ட திருமதி சசிகலா அவர்களுக்கு இறைவன் இம்மியும் உதவவில்லை.

ஆட்சியமைக்குமாறு தமிழக ஆளுநர் சசிகலாவை அழைத்திருந்தால், தமிழகத்தின் முதல்வர் சசிகலா என்ற பெயர் இந்திய வரலாற்றில் பதிவாகியிருக்கும்.

ஆனால் அந்த எல்லைக்கோட்டைத் தொடமுன்னரே உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்துவிட்டது.

தமிழகத்தின் முதலமைச்சராகுவேன் என்று கர்ச்சித்துக் கொண்டிருந்த சின்னம்மா சசிகலாவுக்காக சிறைக் கதவுகள் திறந்திருந்ததை அவரும் அவரது ஆதரவாளர்களும் அறியாமல் இருந்ததுதான் மிகப்பெரிய ஆச்சரியம்.

நான் ஒரு சிங்கம் என்று கர்ச்சித்த சின்னம்மா சிறை செல்லவுள்ளார். சிங்கம் சிறையில் அடைபட்டால் அது வனராஜா என்ற அந்தஸ்தை இழந்து விடுமன்றோ! அதேபோன்று தான் தன்னைச் சிங்கம் என்று கர்ச்சிக்கின்ற சசிகலாவுக்கும் ஏற்பட்டு விட்டது.

சரி தமிழகத்தின் முதல்வராகும் பாக்கியத்தைப் பெற சசிகலா கொடுத்து வைக்கவில்லை என்றால், பன்னீர்செல்வத்துக்கு அந்தப் பேறு கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அட, சசிகலாவோடு பன்னீர் சேர்ந்து போயிருந்தால் அவர் சிறை செல்ல இவரல்லோ முதல்வர். அந்தச் சந்தர்ப்பத்தை பன்னீர் செல்வம் இழந்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றினாலும்,

தமிழகத்தின் அடுத்த முதல்வராகும் வாய்ப்பு யாருக்கு என்பதை தமிழக மக்கள் தீர்மானிப்பர் என்பதற்கு அப்பால் இன்னுமொரு சக்தி தீர்மானிக்கப் போகிறது என்பதே உண்மை.

எது எவ்வாறாயினும் தர்மம் ஏதோவொரு வழியில் அதர்மத்தை சுற்றி சுற்றித் தாக்கி அழித்து விடுகிறது. இதை தமிழகம் மட்டுமல்ல உலகம் முழுவதும் உணர்ந்து கொண்டால் நல்லது.

## மெய்வல்லுநர் போட்டி

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

அதிபர் திருமதி மி.விமலநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கதிர்வேல் விஜிதரன், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி றோகினி பாலஸ்கந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

✦✦✦✦✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் சி. திரிகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஞா.ஆதவன், கௌரவ விருந்தினராக அச்சுவேலி தங்காஸ் ரேடிங் உரிமையாளர் த.ரகீம்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## அனுமதி அட்டைகளை மாணவர்கள் பெறமுடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியினால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை அழகியல் பாட செயன்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மாணவர்கள் பாடசாலை சீருடை அணிந்து தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)

## யோகாசனப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் யோகாசனப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வியாழக்கிழமை கள் தோறும் காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை நடைபெற்று வருகின்றன.

இவ் யோகாசனத்தைப் பயில விரும்பும் அனைவரையும் குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபையினர் அறிவித்துள்ளனர்.

மேலும் இவ் யோகாசனப் பயிற்சிகளை கலாபூஷணம் யோகரத்னா ந.சிவனேஸ்வரராஜா வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3-51)

## விபத்தில் யாசகர் பலி

(கொழும்பு)

தெமட்டகொட மேம்பாலத்தின் கீழ் பாதசாரிகள் கடவை பகுதியில் உறங்கிக் கொண்டிருந்த யாசகர் ஒருவர் மோட்டார் வாகனம் ஒன்றில் சிக்கி உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.30 அளவில் இங்கம சந்தியில் இருந்து தெமட்டகொடவை நோக்கி மேம்பாலத்தின் கீழ் பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று குறித்த யாசகரை மோதிவிட்டு சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த அவர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-7)

## பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட வைத்தியசாலைகள் அனைத்தையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 20 பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 410 மில்லியன் ரூபா நிதியை சுகாதார அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இதேவேளை, உட்கட்டமைப்பு வேலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநோயாளர் பிரிவு 3 சிகிச்சை வழங்கும் பிரிவுகள் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகள் ஆகியன பெற்றுத் தரப்படும் என்றும் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (இ-3-7)

## வழிகாட்டுநருக்கான கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட இலங்கை சாரணியர் மன்றத்தின் பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த பெண் சாரணிய வழிகாட்டுநர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஆணையாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். (இ)

# சட்டமன்ற கட்சித் தலைவராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு

(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை உறுதி செய்யப்பட்டு சசிகலா தகுதி நீக்கம் செய்யப்பட்டதால், அ.தி.மு.கவின் சட்டமன்ற கட்சி தலைவராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சொத்து குவிப்பு வழக்கில் சசிகலா உள்ளிட்டோர் குற்றவாளிகள் என நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அவர்களுக்கான 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையை உச்ச நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது.

அவர்களை விடுதலை செய்து கர்நாடக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் சசிகலா முதலமைச்சராக பதவி ஏற்க முடியாது.

ஆட்சியமைக்கும் முயற்சியாக, ஆதரவு அளித்த எம்.எல்.ஏ.க்களுடன் கூவத்தூர் விடுதியில் தங்கியிருந்த சசிகலா, இந்த தீர்ப்பைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தார்.

நேற்று முன்தினம் இரவே, இப்படியொரு சூழல் வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தியிருந்தார்.

அதன்படி முதலமைச்சர் வேட்பாளராக யாரை முன்மொழிவது என்பது குறித்து கட்சியின் மூத்த உறுப்பினர்களான எடப்பாடி பழனிச்சாமி, செங் கோட்டையன், திண்டுக்கல் சீனிவாசன் மற்றும் ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக் ஆகியோர் பெயர்கள் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியானது.

தீர்ப்பு வெளியானதும் கூவத்தூரில் உள்ள எம்.எல். ஏ.க்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இதனையடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கூவத்தூரில் எம்.எல். ஏக்களுடன் சசிகலா அவசர ஆலோசனை நடத்தினார்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த ஆலோசனையின் முடிவில் சட்டமன்ற கட்சித் தலைவராக அமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டார்.

இதே வேளை அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் நீக்கப்பட்டுள்ளார். (இ-12)

## தவறுகளைத் திருத்தாமல் தேர்தலை நடத்தக்கூடாது

### அமைச்சர் பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளில் ஊழல்களுக்கு வழியை ஏற்படுத்திக் கொடுக்கும் தவறுகளை திருத்தாமல் தேர்தல் நடத்தினால் மக்களுக்கான சேவையை மீண்டும் எதிர்பார்க்க முடியாது போகும என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசியலமைப்பை அடிப்படையாக கொள்ளாமல் தவறுகளை திருத்த செயற்பாட்டு ரீதியான முறைகளை கையாள வேண்டியுள்ளது எனவும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-3-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேச த்தில சாந்தசோலைக் கிராமம், பூவரசங்குளத்திலிருந்து கந்தசாமி நகர் வரை, Rodmand Electro Electrical ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

ரகுவரன் சிறப்பாட்டம்

# உடுவில் சலஞ்சஸ்சை வீழ்த்தியது அளவெட்டி ஞானவைரவர் வி.கழகம்







ரகுவரனின் சிறப்பாட்டம் மூலம் உடுவில் சலஞ்சஸ் அணியை வீழ்த்தியது அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக்கழகம். கல்வியங்காடு GPS விளையாட்டுக்கழகம் அணிக்கு 9 பேர் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட சுற்றுப் போட்டி நடத்தியது.

யாழ்.மாவட்ட ரீதியில் பிரபலமான 48 அணிகள் பங்குபற்றிய போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இறுதிப்போட்டி உடுவில் சலஞ்சஸ அணியை எதிர்த்து அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக் கழகம் மோதியது. முதலில் துடுப்பாடிய அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டுக் கழகம் 2 விக்கெட் இழப்பிற்கு 69 ஓட்டங்களை பெற்றது. 70 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய உடுவில் சலஞ்சஸ 4 விக்கெட்டுகளை இழந்து 66 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வி அடைந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக ரகுவரன் தெரிவானார். (க)

# உடுவில் பிரதேச செயலக உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## குறிஞ்சிக் குமரன் சம்பியன்





உடுவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி (12.02.2017) ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இறுதிப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதிக் கொண்டது.

குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியின் குருபரன் (13வது நிமிடம்) போட்ட அற்புதமான கோல் மூலம் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை 01:00 என்ற ரீதியில் வெற்றி கொண்டு 2017 ற்கான உடுவில் பிரதேச சம்பியனாகியது குப்பிளான் குறிஞ்சிக்குமரன். (க)





மாவட்ட மட்ட கயிறு இழுத்தல் போட்டி கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இதில் நல்லூர் பிரதேசம் சார்பாக பங்குபற்றி அரியாலை சரஸ்வதி இளைஞர்கள் யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவாகியது. வெற்றி பெற்ற வீரர்களை படத்தில் காணலாம்.

# 'ஞானபாஸ்கரோதய வெற்றிக் கிண்ணம்' விண்ணப்பிக்குக

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 7 வீரர்கள் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகள் யாவும் கல்வியங்காடு G.P.S மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக் கட்டணமாக 3ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்தோடு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொடர்புக்கு-077-383-9120,076-822-9634,077-444-5242,077-931-7674 (கு)

# கரவெட்டி பிரதேச செயலக பெண்களுக்கான கபடிப் போட்டி

## மாலுசந்தி மைக்கல் சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவில ஒரு அங்கமான பெண்களுககான கபடிப்போட்டி (12. 02.2017) அன்று காலை 8 மணியளவில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. அரையிறுதிப் போட்டியல இமையாணன் மத்தி அணியை வீழ்த்தி வதிரி டயமன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் 53:20 புள்ளிகள் அடிப்படையில் வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி மாலுசந்தி மைக்கல் அணி கரவெட்டி பிரதேச செயலக 2017ஆம் ஆண்டுக்கான கபடி சம்பியனாகியது. (க)



தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கபடி போட்டியில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தை பெற்றது.

இந்த போட்டியில் கலந்து கொண்ட வீராங்கனைகளைப் படத்தில் காணலாம்.

## ஜனாதிபதியின்...

மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் ஊழியர்களுக்கான தினம் ஒன்றினை பிரகடனப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.பண்ணை, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இவ்வளவு காலமும் திணைக்களங்களில், அலுவலகங்களில் அந்தந்த திணைக்கள மற்றும் அலுவலக தலைவர்கள் மேற்கொள்ளும் கட்டளைகளுக்கு அமையவே ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை ஆற்ற வேண்டிய ஒரு நிலைப்பாடு காணப்பட்டது.

இவற்றை எல்லாம் கருத்தில் எடுத்த ஜனாதிபதி ஒரு வித்தியாசமான கோணத்தில் இப்பிரச்சினைகளை அணுக விரும்பி அதற்கான ஒரு மேடையை சாதாரண அடிமட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறானதொரு நிகழ்வை நாட்டிலுள்ள அனைத்து திணைக்களங்களிலும் சகல அரச நிறுவனங்களிலும் நடத்துமாறு பணிப்புரை ஒன்றை வழங்கியுள்ளார்.

எமக்குக் கிடைத்த அறிவித்தலின் அடிப்படையில், வடமாகாண சபையால் மூன்று பிரிவுகள் பிரிக்கப்பட்டு பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற விடயங்களைக் கையாள்வதற்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைமை ஆணையாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் மற்றும் அவர்களின் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்ட ஒரு சபையையும், வேதனம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விடயங்களுக்கு பிரதிப் பிரதம செயலாளர் நிதி மற்றும் உதவி பிரதிப் பிரதம செயலாளர் நிதி அவர்களைக் கொண்ட ஒரு குழுவும், ஏனைய விடயங்களுக்கு மூன்று பிரதிச் செயலாளர்களைக் கொண்ட ஒரு குழுவாகச் சேர்ந்து மூன்று குழுக்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இச் சபைகளில் தமது பிரச்சினைகளை எடுத்துக்கூற இருக்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அல்லது கிடைக்கப்பெறாத வேதனங்கள் மற்றும் இடமாற்றம் போன்ற பிரகாரணிகள் பற்றி அந்தந்த குழுக்களிடம் தங்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

ஜனாதிபதியின் தீர்மானம் நல்லதாக இருப்பினும் அதை நடைமுறைப்படுத்தும் விதம் சிக்கல் மிகுந்ததாகக் காணப்படும் என்றே நம்புகின்றேன். ஒவ்வொரு திணைக்களத்திற்கும் சுதந்திரமான குறைகேள் அதிகாரி (ombudsman) ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தால் நன்மை பயந்திருக்கும். எனக்கென்னவோ பூனையைக் கொண்டு பாலைப் பாதுகாக்க வைப்பது போல் இந்த நடைமுறை தென்படுகின்றது.

எனினும் சற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்ட விடயம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றிய அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சில சலுகைகளை ஒத்ததாக அமைந்துள்ளது என்று அறிகின்றேன்.

குறைகேட்கப் போகின்றவர்கள் சுயமாக இயங்கும் வேறு அதிகாரிகள் அல்ல என்பது ஒரு குறையாகவே எனக்குப்படுகின்றது. எனினும் உங்கள் குறைகளை முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தினால் அவர் தன்னாலானதைச் செய்வார் என்ற உறுதிமொழியையும் இச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்கின்றேன். இத்தருணத்தில் எமது மக்களின் குணாதிசயங்களும் மனதிற்கு எடுக்கப்பட வேண்டும்.

கொஞ்சக் காலத்தில் இன்று தொடங்கப்படும் இந்த நடைமுறை கைவிடப்படுமோ என்று யோசிக்கின்றேன். ஏன் என்றால் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், மேலும் வேதனம், கொடுப்பனவுகள், இன்னோரன்ன விடயங்களைக் கவனிக்கும் அதே அலுவலர்களிடமே உத்தியோகத்தர்களைத் தமது குறைகளைக் கூறுங்கள் என்று கூறுகின்றோம்.

இது எந்தளவுக்குப் பயன் அளிக்கும் என்பதை இருந்தே பார்க்க வேண்டும். எனினும் இந்தப் பொறிமுறை நல்லாட்சியைப் பேண எடுத்த ஒரு நடவடிக்கையாகவே இதைக் காண்கின்றேன். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நியாயமான நீதியான தீர்மானங்கள் எடுத்தல் போன்ற பலவும் நல்லாட்சியின் அம்சங்கள். அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வடமாகாணம் அவற்றில் முன்னணியில் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன் என அவர் மேலும்தெரிவித்தார். (செ-9)

## மழைக்கு மத்தியிலும்...

கடும் மழைக்கு மத்தியிலும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்களின் காணி மீட்பு போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மக்களின் கோரிக்கைக்கு தீர்வுகள் எதுவும் வழங்கப்படாத நிலையில், நேற்று 16ஆவது நாளாகவும் அம் மக்கள் தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

விமானப் படையினரால் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்ட காணிகளை தம்மிடம் கையளிக்க வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி தமது காணிகள் விடுவிக்கப்படும் என கிராம உத்தியோகத்தர் அழைப்பு விடுத்ததன் பேரில் தாம் வருகை தந்த போதிலும் அதிகாரிகள் எவரும் வருகை தராததை அடுத்து மக்கள் காணி மீட்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

அதிகாரிகள் தம்மை ஏமாற்றுவதாக தெரிவித்து, தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கபோவதாக தெரிவித்த மக்கள், கடந்த 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்த நிலையில் அவர்களின் போராட்டம் வலுப்பெறும் நோக்கில் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் என பல தரப்பட்டவர்களும் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர். (செ-11)

## அசிட் வீச்சில்...

இளஞ்செழியன் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்

மேற் குறித்த வழக்கு விசாரணைகள் 6 வருடங்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இளவாலைப்பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு தனது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த மாணவியின் மீது இனம் தெரியாதவர்கள் அசிட் வீசிச்சென்றுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 55 நாட்களின் பின்னர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் காதல் விவகாரத்தால் இடம்பெற்றது என சந்தேகித்த பொலிஸார் குறித்த மாணவியை காதலித்த இளைஞன் ஒருவரை கைதுசெய்து மன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைத்தனர்.

குறித்த வழக்கின் முக்கிய சாட்சியாக இனங்காணப்பட்ட குறித்த மாணவியின் தாயார் சாட்சியமளிக்கையில்,

சம்பவம் இடம்பெற்ற அன்று இரவு 9.30 மணியளவில் நான் வீட்டில் சமையலறையில் இருந்தேன். எனது மகள் வீட்டின் இரவு உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அத் தருணம் திடீரென மகள் அலறியதுடன் தனக்கு ஏதோ ஒன்று ஊற்றப்பட்டதாகவும் உடல் எல்லாம் எரிவதாகவும் கூறினார்.

நாம் அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தோம். அப்போதுதான் மகள் மீது அசிட் ஊற்றப்பட்டது தெரியவந்தது.

எனினும் யார் மகள் மீது அசிட் ஊற்றினார்கள் என நான் காணவில்லை. மகளும் அதை அறிந்திருக்கவில்லை. எனினும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் எனது மகளைக் காதலித்து வந்ததும் தொலைபேசியில் குறுந்தகவல் மூலம் மிரட்டல் விட்டதையும் அறிந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தேன் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி இளஞ்செழியன் மேலதிக சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (செ-9)

## கேப்பாப்பிலவு...

ப்புத் தரப்புக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொழும்பில் நேற்று சந்தித்து கேப்பாப்பிலவு மக்களின் காணிப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்போது முல்லைத்தீவு மக்களின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைளை முன்னெடுக்குமாறு இராணுவத்தளபதிக்கு தொலைபேசி ஊடாக ஜனாதிபதி அறிவுறுத்தியதாக அமைச்சர் சுவாமிநாதன் தகவல் தெரிவித்தார்.

இன்று (நேற்று) காலை ஜனாதிபதியோடு முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை மக்களிடம் மீள கையளிப்பது பற்றி கதைத்தேன். இக் காணிகளுடைய அபகரிப்பை உடனடியாக நிறுத்தவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி இராணுவத்தளபதியோடு கதைத்தார்.

அதற்கு பதிலளித்த இராணுவத் தளபதி, இந்தக் காணிகளை மிக விரைவிலே மக்களிற்கு திருப்பி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியிடம் கூறியிருக்கிறார் என அமைச்சர் சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ள இராணுவ ஊடகப்பேச்சாளர் ரொசான் செனவிரத்ன கேப்பாப்பிலவு உள்ளிட்ட முல்லைத்தீவு பிரதேசத்தில் மக்களின் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இராணுவத்தளபதியின் ஆலோசனையோடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களிடம் கூறியுள்ளார். (செ)

## ஏனையோரின்...

ற்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய போதே பிரதமர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பட்டமேற்படிப்பு என்பது நீண்டதூரப் பயணம் அதில் மாணவர்கள் சலிக்காது பயணிக்க வேண்டுமெனவும் பிரதமர் வலியுறுத்தினார்.

டீக்கென் பல்லைக் கழகத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் பின் தொடர்பவர்களாக செயற்பட வேண்டுமெனவும், பணிவுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதோடு, மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பாக மற்றவர்கள் விடும் தவறுகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

வாழ்க்கையில் இழப்புகளை தாங்கிக்கொள்ள தயாராகவே இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்ட அவர், வாழ்க்கையில் வெற்றிதோல்வி வருவது இயல்பு எனவும், எனினும் அவற்றை நிர்வகிக்க பழக்கிக்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

நீடித்த அதிர்ச்சியான சூழலில் இருந்து நாட்டில் இயல்புநிலையை ஏற்படுத்துதல் மற்றும் வன்முறைகளில் இருந்து ஸ்திரமான ஜனநாயகத்தை நோக்கிய செயற்பாடுகளுக்கு உதவியமைக்காக பிரதமருக்கு இந்த கலாநிதி பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கத்தின் தேவையை வலியுறுத்திய அதேவேளை பொறுப்புகூறலை உறுதி செய்துள்ளதாகவும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் எதிர்கால நம்பிக்கையை அவர் ஏற்படுத்தியுள்ளதாகவும் டீக்கென் பல்கலைக்கழக பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க, விக்டோரியா மாநில ஆளுநர் லிட்டா டேசாய் யையும் சந்திக்கவுள்ளதாக அவுஸ்திரேலியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அத்துடன் அவுஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு, 70 ஆண்டு பூர்த்தி நிகழ்வில் அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் ரேன்புல்லுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## கொக்கேனுடன் மூவர் கைது

(கொழும்பு)

சுமார் 30 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய கொக்கேன் போதைப்பொருளை இலங்கைக்குள் கொண்டு வந்த லிதுவேனியா நாட்டவரொருவரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து நேற்று கைது செய்துள்ளது.

இந்த போதைப்பொருளை பொறுப்பேற்க வந்த நைஜீரியா நாட்டவர்கள் இருவரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரேசில், லிதுவேனியா, இந்தியா, நைஜீரியா மற்றும் இலங்கையை தொடர்பு படுத்தி இந்த போதைப்பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்படுவதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுப்புக்காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)


## மரண அறிவித்தல்

### விஸ்வரட்ணம் மகேஸ்வரி அம்மா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 02 - 1928 | 14 - 02 - 2017 |

சாரையடி, புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வரட்ணம் மகேஸ்வரி அம்மா 14.02.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற விஸ்வரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், கரிதேவ் (கரி), கமலாசனி (கல்யாணி), சோமாஸ்கந்தராஜா (ஞானம்), விஸ்வகுமார் (குணம்), கிருஷ்ணவேணி (சாந்தி) ஆகியோரின் தாயாரும், லோகேஸ்வரி, நல்லிராணி, யோகராசா, பவளராணி, பழனித்துரை ஆகியோரின் மாமியாரும், சுஜந்தன், விஸ்னுஜன், சாயினி, வைதேகி, தாரங்கனி, தருமிளா, தனுஸ், சேமா, ரஜிதா, ரஞ்சித் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மிதுனா, விக்சிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 16.02.2017 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுபர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ராஜன்வாசா"
சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி. (ரி-7557)

தகவல்:-
குடும்பத்தினர்

## கர்ப்பிணி கொலை;...

கடந்த மாத இறுதியில் ஊர்காவற்றுறை கரம்பொன் பிரதேசத்தில் ஏழு மாத கர்ப்பிணி பெண்ணொருவர் வீட்டில் தனித்திருந்த வேளை மிகக் கொடூரமான முறையில் படு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து இக் கொலையை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் இருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த கொலை சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம பெற்று வருகின்றது. நேற்றைய தினம் குறித்த வழக்கு விசாரணையின் மரண விசாரணையானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ரஞ்ஜித்குமார், சரண்யா ஜோசெப், டெனிஸியஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். இதன்போது இக்கொலை சம்பவம் தொடர்பாக இருவரது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டது.

குறித்த படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் மற்றும் குறித்த பெண் படு கொலை செய்யப்பட்டிருந்ததை முதலில் பார்த்ததாக தெரிவிக்கப்பட்ட அயல் வீட்டுப்பெண ஆகியோரது சாட்சியப் பதிவுகளே நேற்று பதிவு செய்யப்பட்டது.

இதன்போது இரண்டாவதாக அயல் வீட்டு பெண்ணின் சாட்சிய பதிவானது இடையில் நிறுத்தப்பட்டதுடன் அவரது மிகுதி சாட்சியம் உட்பட ஏனையோரது சாட்சியமும் அடுத்த வழக்குத் தவணையின் போது பதிவு செய்யப்படும் என நீதவான் கட்டளையிட்டிருந்தார்.

மேலும் நேற்றைய சாட்சிப் பதிவின் போது இச் சாட்சிகளின் பாதுகாப்பை கவனத்தில் கொண்ட நீதிவான், சாட்சியப் பதிவுகளை நீதிவானது பிரத்தியேக சமாதான அறையில் வைத்து மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை கர்ப்பிணிக் கொலை சம்பவத்தை நேரில் பார்த்ததாக தெரிவிக்கப்படும் சிறுவனுக்கு உயிர்அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். (செ-4)

## பிரமிட் வியாபார...

வங்கியினால் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனைத்தொடர்ந்து, குறித்த வியாபாரத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வியாபாரமானது ஒரு பிரமிட் வடிவ செயற்பாட்டு அமைப்புடன் இருப்பதுடன் ஒரு தனி நபருக்கு கீழ் மேலதிக நபர்களை இணைத்துவிடுவதன் மூலம் இலாபம் உழைக்கும் முறையாகும்.

இதில் மருந்து, தங்க நாணயங்கள், மரத் தளபாடங்கள், மின்சாரப்பொருட்கள் போன்றவற்றை வாங்க வேண்டும். ஒரு தொகைப்பணத்தைச் செலுத்த வேண்டும் அல்லது இணையத்தளம் மூலமாக வைப்பிலிட வேண்டும்.

இத்திட்டத்தில் இணைவதற்கு மற்றவர்களைச் சேர்த்தல் வேண்டும் என மக்களுக்குப் பணிக்கப்படுகின்றது. இவை வங்கித் தொழில் சட்டத்தின் 83சி பிரிவின் கீழ் சட்ட விரோதமாகும்.

இதில் மக்கள் வஞ்சகமான முறையில் கவரப்படுகின்றனர். அநேகமாக புதிய பங்கேற்பாளர்கள் எதிர்பார்த்த வருமானத்தை இழப்பதோடு கூடுதலாக விலை மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களையும் வைத்திருக்க வேண்டி நேரிடும்.


எனினும் 1988ஆம் ஆண்டு 24ஆம் இலக்க அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தண்டிக்கப்பட கூடிய குற்றங்கள் ஆகும்.

இச்செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படிப்பட்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாக கண்டுபிடிக்கப்பட்டால் அவருக்கு 3 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாய்க்கு குறையாத அபராதம் என்பன நீதிமன்றத்தால் விதிக்கப்படும்.

மேலும் மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது வேண்டுமென்றோ அல்லது தெரிந்து கொண்டோ புரிந்திருந்தால்,

3 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 5 வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் 20 மில்லியன் ரூபாய் அபராதம் அல்லது திட்டத்தின் பங்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் எது கூடியதோ அத் தொகையை கொண்ட அபராதம் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் எனவும் யாழ்.பொலிஸ நிலைய குற்றத்தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தெரிவித்துள்ளார். (செ-4)

## புலமையாளர் முத்துலிங்கம் காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியரும் ஆங்கில மொழிப் புலமையாளருமான சண்முகம் முத்துலிங்கம் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 78.

மாக்சிச சிந்தனையில் அதீத ஈடுபாடுகொண்டிருந்த முத்துலிங்கம் அவர்கள் சிறந்த விமர்சகராக விளங்கியதுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆழ்ந்த புலமையும் கொண்டிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்ட காலத்தில் நாடகத்துறையில் அதீத ஆர்வம் காட்டிய அவர் தொடர்ந்தும் நாடகத்துறையில் தனது வகிபாகத்தை வழங்கியிருந்ததுடன் மாலைதீவிலும் தனது ஆசிரியப் பணியை மேற்கொண்டார்.

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையை பரமேஸ்வரா வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் செய்வதில் முன்னின்று உழைத்த அவர் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலி சைவப் பாடசாலை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (செ)

## மானிய விலை...

யிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அரிசி இறக்குமதியின் போது வழங்கப்பட்டுள்ள வரி சலுகைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக ஓர் இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை அரச களஞ்சியங்களில் சேமித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரிசிக்கான அதிகபட்ச விலைகளை நிர்ணயிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (செ-11)


BA, BBA, B.Com
பேராதனை, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் வெளிவாரி (ஒலுவில்)

- A/Lஇல் 2016இல் பரீட்சை எழுதியவர்களும் இதற்கு முன்னர் பரீட்சை எழுதியவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- A/Lஇல் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவார்.
- பதிவுகளும் விரிவுரைகளும் ஆரம்பம்:-18.02.2017 காலை 8 மணி

விபரங்கட்கு:-
S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
(த-7550)



31-ம் நாள் நினைவழியா அஞ்சலிகள்...

அமரர் இராசதுரை இராசேந்திரம்



உதயவோடு: 1958.10.28
இறைபோடு : 2017.01.16

பெற்றெடுத்த தாய் தவிக்க பேரிடியாய் ஓர் செய்தி
உற்றதுணை உறவினர்கள் உடன்பிறந்த சோதரர்கள்
கொற்றவனே உனைஇழக்க கொடுமையது நேர்ந்ததுவோ
ஒருநாள் தவில்கூட உன் திருமுகத்தைப் பாராது
தீராத உன்னினைவுகள் தாங்கி ஒரு மாதமையா
வருவாய் னெக்காத்து வாசல்வரை தேடுகிறோம்
வாழ்வுநிறைந்த உன்வாழ்வு சாந்திபெற இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவற்காடு, அச்சுவேலி.
(த-7551)
- குடும்பத்தினர்



உடனடி வேலைவாய்ப்பு

வட மாகாணத்தின் முன்னணி புத்தக மற்றும் ஸ்ரேசனறி வியாபார நிறுவனத்துக்கு
- சிட்டை எழுதுநர்கள் } ஆண்/பெண்
- விற்பனை பிரதிநிதிகள் } அனுபவமுள்ள/அனுபவமற்ற.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

காலை 10.00 மணி முதல் 4.30 மணி வரை
நேரில் சமுகம் தரவும்

பட்டதாரிகள் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
212, 214, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
acdil@ymail.com
(த-7540)



எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress
(த-7545)



கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2017

காலம் : 2017.02.26 (ஞாயிறு மாலை 2 மணி)
இடம் : கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி பிரதான மண்டபம்

மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி
(த-7556)



மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்து புத்தகங்களுக்கும் 10% - 30% வரையான விசேட விலைக்கழிவுகள்
இடம் : முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி,முல்லைத்தீவு
காலம் : 16.02.2017 - 22.02.2017 வரை

ஏற்பாட்டாளர்கள் : யாழ் புத்தகசாலை
22, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 493 7568, 077 834 9507



பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்துக்கு
01. Heavy Vehicle Driver (Colombo - Jaffna)
02. Marketing Sales & Executives for Distribution
03. Accounting Staff (MS Office, MS Excel, Quick book)
தேவை. மேலதிக விபரங்களுக்கு:

KINGS ELECTRONICS (PVT) LTD
No.12, Point Petro Road, Jaffna.
T.P : 021 454 6699
(த-7552)



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்



UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS- 0768226240
யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.